15-11-57

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



1173

13

# செய்திகள்

## சென்னையில் குழந்தைகள் தியேட்டர்

மவுன்ட் ரோடு சர்க்கார் மாளிகைக்கு அருகே கட்டப்பட்டிருந்த சட்ட சபைக் கட்டடம் இனிக் குழந்தைகள் தியேட்டராக மாற்றப் படுமாம். இப்பொழுது சட்ட சபைக் கூட்டம் கோட்டையிலேயே நடைபெறுவதால், அந்தக் கட்டடத்தில் குழைந்தைகளுக்காக நிரந்தர மான ஒரு தியேட்டர் ஏற்படுத்தப் போகிறார்கள். டிசம்பர் முதல் வாரத்தில் பிரதம மந்திரி நேருஜி சென்னை வருகிறார். அப்போது அவர் இந்தத் தியேட்டரைத் திறந்து வைப்பார். வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் குழந்தைகளுக்கு அங்கே படங்கள் காட்டப்படும்.

## ரஷ்ய சந்திரனில் நாய்

ரஷ்ய செயற்கைச் சந்திரனுக்கு ஸ்புட்நிக் என்று ஒரு பெயரிட் டிருக்கிறார்கள், முதல் செயற்கைச் சந்திரனை வெற்றிகரமாக வானில் சுற்றவிட்ட பிறகு இரண்டாவதாக ஒரு பெரிய சந்திரனை இப்போது விட்டிருக்கிறார்கள். ஸ்புட்நிக்-2 அரை டன் எடையுள்ளது. அதில் ஒரு நாயையும் உட்காரவைத்து, ஆயிரம்மைல் உயரத்துக்குமேல் வானில் சுற்றவிட்டிருக்கிறார்கள். லெய்கா என்ற நாய்தான் வான வெளியிலே, காற்றையும் கடுவெளியையும் கடந்த முதல் பிரயாணி. அது எட்டு நாள் போல் உயிர் வாழ்ந்து பூமியை நூற்றுக்கணக்கான தடவை வலம் வந்துவிட்டு, உயிர் நீத்துவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. பூமியி லிருந்து ராக்கெட்டுகள் மூலம் ஆகாய வெளியை நோக்கி ஏவிவிட்ட ஸ்புட்நிக்கை மீண்டும் பூமிக்குக் கொண்டுவரும் வழிதுறைகளோ சாத னங்களோ இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த நாய் இறந்து விட்டதற்காக ரஷ்ய வான ஆராய்ச்சிக் கூடத்தில் துக்கம்கூடக் கொண் டாடினார்களாம். முன்பு, இந்த நாய் பாரசூட் மூலம் ரஷ்யாவிலேயே இறங்கிவிட்டதாகச் செய்தி வெளியாயிற்று. பிறகுதான் நாய் இறந்து விட்டது என்ற அறிவிப்பை ரஷ்யா அதிகார பூர்வமாக வெளியிட்டது.

## பாட புத்தகங்கள்

சென்னையில் பள்ளிக்கூடங்களுக்கான பாட புத்தகங்களை, சர்க் காரே தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு எழுதுவித்து, வெளியிட எண்ணி யிருக்கிறார்கள். இப்போது பல பிரசுரகர்த்தர்கள் பாட புத்தகங்களை வெளியிட்டு, அவற்றைப் பாட புத்தகச் சபையின் அங்கீகாரம் பெற்று, பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள். காலேஜ் பாட புத்தகங் களையும் தமிழில் தயாரிக்க, சென்னை சர்க்கார் திட்டம் தயாரித்திருக்கி றார்களாம்.

## நேருஜி சென்னை விஜயம்

அடுத்த மாதம் முதல் வாரத்தில் நமது பிரதம மந்திரி நேருஜி சென்னைக்கு அடுத்த கிண்டியில் உள்ள தொழில் எஸ்டேட்டைத் திறந்து வைக்கச் சென்னை வருகிறார். அன்று இரவே மதுரைக்கருகில் உள்ள காந்தி கிராமம் சென்று மறுநாள் திருச்சி வருகிறார். வழியில் திண்டுக் கல்லில் ஒரு பொதுக்கூட்டத்திலும் பேசுவாராம். ஒன்பதாம் தேதி திருச்சியிலிருந்து டில்லி திரும்புவார் என்று தெரிகிறது.

## மூன்றாவது ரஷ்ய சந்திரன்

இப்பொழுது மூன்றாம் முறையாக ரஷ்யா வானவீதியில் பறக்கவிட ஒரு சந்திரனைத் தயாராக வைத்திருக்கிறார்களாம். இதன் எடை ஒரு டன் இருக்குமாம். முதலிரண்டு சந்திரன்களைவிட இது அதிக இயந்திர சாதனங்களைக் கொண்டதாக இருக்குமாம். இதிலும் உயிரோடு ஒரு பிராணி அனுப்பப்படும் என்று சொல்லப்படுகிறது.

# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 22

15-11-'57

குழந்தைகளே! பக்கம் 2
அம்புலிக் கிண்ணம் .. 3
குருட்டு அதிர்ஷ்டம் .. 4
ஆக்கப் பொறுத்தவர் .. 9
காட்டில் கல்யாணம் .. 13
தீபாவளிப் பரிசு .. 14
இக்கரைக்கு அக்கரை .. 19
நீங்களும் நானும் .. 25
கடற் புலி .. 27
பீதி .. 29

அட்டைப் படம்:

இந்திய சர்க்கார் செய்தி இலாகா

செய்திகள் - 2-ஆம் அட்டை
பேனா நண்பர்கள் 3-ம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## நல்ல யோசனை

மணிக்கு ஒரே கவலை. திங்கட்கிழமைக்குள் அவரிடம் கையெழுத்து வாங்க வேண்டும். இல்லாவிட்டால்....?

வகுப்பறையில் அத்தனை மாணவர்கள் எதிரில் ராஜுவுடன் ஒரு பந்தயம் வைத்தான். அதாவது, மணி ஒரு குறிப்பிட்ட பிரமுகரிடம், 'ஆட்டோகிராப்' வாங்கிவிடவேண்டும் என்பதுதான். அவரோ சோதனையாக வெளியூர் போய் இருந்தார். மணிக்குச் சடாரென ஒரு யுக்தி தோன்றியது. குதூகலத்துடன் தபால் நிலையத்தை நோக்கி ஒடினான். விஷயம் பாதி முடிந்துவிட்டது.

திங்கட்கிழமை. பொழுது விடிந்தது. மணி வீட்டிற்கு ராஜு சென்றான். "என்ன, கையெழுத்துக் கிடைத்ததா? என்ன தோல்விதானே?" என்றான். "பொறு, இன்று பூராவும் 'டயம்' உள்ளதே! மாலை தபால் நிலையத்தில் சந்திப்போம்" என்றான் மணி.

மாலை தபால் நிலையத்தில் மணியும், ராஜுவும் நுழைந்தனர். மணி போஸ்ட் மாஸ்டரை அணுகி, "ஐயா, எனக்கு ஏதாவது கடிதம் வந்துள்ளதா?" என வினவினான். அவர் அப்பொழுதுதான் வந்த கட்டுக்களைப் பார்த்துவிட்டு, "சுப்பிரமணியம் தானே! உனக்கு ஒரு மணியார்டர் ரசீது வந்துள்ளதே!" என்றார். அவன் ஆவலுடன் வாங்கி, ராஜுவிடம் காண்பித்தான். ராஜுவுக்கு ஒன்றும் புரியவில்லை. மணி ஒன்றும் பேசாமல் மணியார்டர் பெற்றவரின் கையெழுத்தைக் காண்பித்தான். யாருடைய கையெழுத்து ராஜு வேண்டுமென்றானோ அவருடையதுதான் அது! ராஜுவிற்கு ஒரே ஆச்சரியம். பிறகு மணி விளக்கினான்:—

"நான் அவருடைய பஞ்ச நிவாரண நிதிக்கு மணியார்டர் மூலம் நாலணா அனுப்பினேன். கையெழுத்திட்ட ரசீது எனக்கு வந்து சேர்ந்தது! உனக்கு வேண்டியது கையெழுத்துதானே!"

—து. ராஜகோபாலன்.

# குழந்தைகளே!

நவம்பர் மாதம் பதினாலாம் தேதி குழந்தைகளுக்கு முக்கியமான தினம். மறக்க முடியாத நாள். இந்த நாட்டின் பிரதம மந்திரி நேரு அவர்கள் பிறந்த நாள் அது. இது நமக்கு எல்லாருக்கும் தெரியும். நேருவின் பிறந்த நாளை நாம் மறக்காமல் விசேஷமாகக் கொண்டாடி வருகிறோம். காரணம், அவர் குழந்தைகளை ஒரு நாளும் மறப்பதே யில்லை. குழந்தைகள் என்றால் அவருக்கு அத்தனை பிரியம். குழந்தைகளும் அவரை, 'நேரு மாமா நேரு மாமா' என்று கொண்டாடு கிறார்கள். நம் நாட்டுக் குழந்தைகள் மட்டுமல்ல; வெளி நாட்டுக் குழந்தைகளுக்கும் அவரிடம் அன்பு உண்டு. ஜப்பான் நாட்டுக் குழந் தைகளுக்காக ஒரு யானையையே அவர் பரிசாக அனுப்பினார். அமெரிக்கக் குழந்தைகளுக்கும் அதேபோல ஒரு யானையை அனுப்பினார். இப்படிப் பல நாட்டிலும் உள்ள குழந்தைகளுக்கு அவர் பல பரிசுகள் அனுப்பி அவர்களுடைய அன்பையெல்லாம் பெற்றிருக்கிறார்.

இந்த நாட்டிலும் இப்பொழுது எல்லாரும் குழந்தைகள் விஷயத்தில் அக்கறை காட்டுகிறார்களே, அதற்குக்கூட அவர்தான் காரணம். எந்த ஊருக்கு வந்தாலும் குழந்தைகளைக் கூட்டி அவர்களிடையே சிறிது நேரம் உல்லாசமாக விளையாடாமல் அவர் போவதேயில்லை. அவருடைய அன்பைப் பார்த்து விட்டுத்தான் அவர் பிறந்த நாளை அகில இந்தியக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறோம்.

குழந்தைகள்தான் நாட்டின் தனிச் சொத்து. பொன்னையும் மணியையும் விட, வைரத்தையும் வைடூரியத்தையும்விட உயர்ந்த செல்வம் குழந்தைச் செல்வம். அவர்கள் நல்ல முறையில் உருவாகி விட்டால், ஒரு நாடு உயர்ந்த நிலையை அடைந்துவிடும். இதை இப்பொழுது நாட்டில் உள்ள அனைவரும் உணரத் தலைப்பட்டு விட்டார் கள். குழந்தைகள் பாடு இனிக் கொண்டாட்டம்தான். இந்தக் குழந்தை கள் தினத்தை நீங்கள் மிகச் சிறந்த முறையில் உங்கள் ஊர்களில் விழா வாகக் கொண்டாடுவீர்கள் என்று நம்புகிறேன்.

நீங்கள் எல்லாரும் இப்படி ஒரு கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவும் உங்கள் திறமைகளைப் பெருக்கிக்கொள்ளவும் உங்கள் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு உள்ளமும் உருவமும் விரிவடையவும் ஒரு பொதுவான இடம் தேவை. அதற்காகவே கண்ணன் சார்பில் எட்டு வருஷங்களுக்கு முன்பேயே கண்ணன் கழகம் என்று ஏற் படுத்தினோம். பல இடங்களில் கண்ணன் கழகம் இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதேபோல் குழந்தைகளுக்காக என்று ஒரு 'கிளப்' தேவை. அதை எப்படி ஏற்படுத்துவது, அதில் என்னவெல்லாம் செய்யவேண்டும் என்று இந்திய ஊழியர் சங்கத்தின் சென்னைக் கிளையின் காரியதரிசியான திரு சி. ரா. வேங்கடராமன் அவர்கள் பெரியோர் களுக்கு ஒரு கட்டுரையே எழுதியிருக்கிறார்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதைப் படித்து அதே போல் ஊருக்கு ஊர் குழந்தைகள் சங்கங்கள் ஏற்படுத்த உதவவேண்டும் என்பது என் ஆசை. உங்கள் வீட்டுக்கும் உங்கள் பள்ளிக்கூடங்களுக் கும் ஓர் இணைப்பாலமாக அந்தச் சங்கங்கள் விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

தொடர்கதைப் போட்டிக்குப் பிறகு, சிறு கதைப் போட்டி வைக்கக்கூடாதா என்று சில நண்பர்கள் எழுதியிருக்கிறார்கள். ஒவ்வோர் இதழிலும் அறிவுக் கட்டுரை வெளியிட வேண்டும் என்று பலர் எழுதி யிருக்கிறார்கள். அது பற்றிப் பின்னர் அறிவிக்கிறேன்.

—ஆசிரியர்.

# அம்புலிக் கிண்ணம்

'வேலன்'




அங்கே! அதோ பார்!
அம்புலிக்கிண்ணம்! நிமிர்ந்துபார்!
நீலவர்ணப் பூங்குளத்தில்
நின்றுநின்று மின்னும்.

பால்குடிக்கும் மீன்களுக்குப்
பால்சொரியும் கிண்ணம்,
அதோபார்!
நிமிர்ந்து பார்! வானத்திலே!

அள்ளி அள்ளிப் பாலமுதை
அண்டமெல்லாம் ஊற்றிவரும்,
மெள்ளமெள்ள வான்வெளியில்
மேலான பவனிவரும்.

அதோ பார்!
நிமிர்ந்து பார்! வானத்திலே!
ஓட ஓடக் கூடவரும்
உட்கார்ந்தால் ஓய்ந்திருக்கும்!

தேடித்தேடி முட்டவரும்
திரைமேகம் வெட்டிவரும்
அதோ பார்!
நிமிர்ந்து பார்! வானத்திலே!

எட்டாத உயரத்திலே
எழில் வீசும் கிண்ணம் - அதைத்
தொட்டுவரக் கடலலைகள்
துடித்து வீழும் கிண்ணம்

அதோபார்!
நிமிர்ந்து பார்! வானத்திலே!
வட்டமான பெரியகடல்
தொட்டுப் பார்க்க ஓங்குது

தொட்டி நீரில் அந்தக் கிண்ணம்
வட்டமாகத் தூங்குது.
இதோ பார்!
குனிந்து பார்!
இங்கே பார்! தொட்டியிலே!



# குருட்டு அதிர்ஷ்டம்

'நடனு'

பிள்ளையாரின் எதிரே கைகூப்பி மெய்ம்மறந்து நின்றான் சுந்தரமூர்த்தி. "பிள்ளையாரே, இந்த வேலையாவது கிடைக்கணும். அதற்கு நீதான் அருள் புரியணும். இவ்வளவு வருஷமா அலைஞ்சு அலைஞ்சு உடம்பு தேஞ்சு போச்சு. உள்ளமும் உடைஞ்சு போச்சு. இதுதான் கடைசித் தரம். இதுவும் கிடைக்கவில்லையோ பிறகு இரண்டே வழிதான் பாக்கி. ஒன்று திருடணும்; இல்லே, தற்கொலை பண்ணிக்கணும். திருட மனம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே மற்றொரு வழிதான் செய்யணும். நீ எப்படி விட்டாலும் சரி...." என்று அவன் வாய் முணுமுணுத்தது. மறுபடி ஒரு முறை வணங்கி எழுந்தான். பிறகு மெல்ல நடக்கத் தொடங்கினான்.

சுந்தரமூர்த்தி மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். தகப்பனார் சிறுவயதிலேயே காலமாகி விட்டார். தாய் மிகச் சிரமப்பட்டு பல இடங்களில் உழைத்து அவனைக் காப்பாற்றியதோடு படிக்கவும் வைத்தாள். சின்ன வகுப்புகளில் படித்த வரையிலும் அதிகக் கஷ்டம் தெரியவில்லை. பெரிய வகுப்புகளில் நுழைந்ததுமே செலவுகளும் அதிகரிக்கத் தொடங்கின. செலவுகளைச் சமாளிக்க அவன் தாய் மிகவும் சிரமப்பட்டாள்.

தன் தாயின் சிரமத்தைப் பார்த்து சுந்தரமூர்த்தி வருந்தினான். "அம்மா, நீ இம்மாதிரி எவ்வளவு நாளைக்குத்தான் சிரமப்படுவாய்! படித்தது போதும். நான் ஏதாவது வேலை செய்கிறேன். நீ வீட்டிலேயே இரு" என்று எவ்வளவோ தரம் சொல்லியும் அவன் தாய் கேட்கவில்லை.

"இந்தப் படிப்பு எப்படியடா போதும்? அரைகுறைப் படிப்பு ஒன்றுக்குமே உபயோகமில்லாமல் போய்விடும். எப்படியாவது பத்தாவது வரை படித்துவிட்டால்,

யாரிடமாவது கெஞ்சி ஒரு உத்தியோகம் வாங்கிவிடலாம். பிறகு எனக்கென்ன வீட்டில் உட்கார்ந்து கொள்ள வேண்டியதுதானே! நீ நன்ருகப் படி; இதையெல்லாம் நினைக்காதே. என் உடம்பில் தெம்பு இருக்கும்வரை உன் படிப்புக்காக—நீ முன்னுக்கு வருவதற்காக உழைப்பதுதான் எனக்கு இன்பம்..போ - படி'' என்று கூறி விடுவாள்.

அம்மாவின் மனப்போக்கு மகனுக்குப் புரிந்துவிட்டது. ''எஸ். எஸ். எல். ஸி. வரை எப்படியாவது படித்து முடித்துவிட வேண்டும். உடனே ஒரு உத்தியோகம் பார்த்துக் கொள்ளலாம். பிறகு அம்மாவை ஒரு வேலையும் செய்ய விடக்கூடாது. அவள் செய்யும் தியாகம் சாதாரணமானதா? அதற்கு ஈடாக யார் என்ன செய்ய முடியும்? அன்பினுல் அவள் செய்யும் இந்தத் தியாகத்திற்கு அவளிடம் மாருத பக்தியுடன் சேவை செய்ய வேண்டும். அவள் கொஞ்சமும் சிரமமின்றிச் சந்தோஷமாக இருக்கவேண்டும்'' என்று தீர்மானித்துக்கொண்டான்.

அவன் இருந்த நிலையில் ஒவ்வொரு வருடமும் எல்லாப் புத்தகமும் வாங்க முடிவதில்லை. எல்லா நோட்டுப் புத்தகங்களும் வாங்க வசதிப்படாது. ஒன்ரு; இரண்டா! அவ்வளவையும் வாங்க எவ்வளவு செலவாகிறது? அவனைப் போன்ற ஏழைகளால் முடியும் காரியமா?

ஒரு புத்தகம் இல்லை என்பதற்காக ஓர் ஆசிரியர் வகுப்பிலிருந்து விரட்டிவிடுவார்; அவர் போனதும் மெல்ல உள்ளே சென்று உட்காருவான். அதற்குள் மற்ருெரு உபாத்தியாயர் வருவார். ஏதோ ஒரு 'நோட்டு' இல்லை என்று, ''வெளியே, போ!'' என்று அதட்டுவார். வகுப்புக்கு வெளியே வந்து வாசற்படியருகில் நின்று 'தவம்' செய்வான். ஆயினும் பாடங்களைக் கவனித்துக் கொள்வான். இப்படியே ஒரு நாளில் பாதி நேரம் வெளியிலேயே கழியும். இதை அம்மாவிடம் சொல்லமாட்டான். தெரிந்தால் வருத்தப்படுவாள். அதற்காக இன்னும் சிரமப்பட்டு உழைத்துச் சம்பாதிக்க முயற்சிப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். பாவம்! அம்மா! படித்து முடித்துவிட்டால் உத்தியோகம் பார்க்கலாம். இப்படியே எண்ணி எண்ணிக் காலத்தைத் தள்ளினுன்.

ஆருவது படிவமும் பாஸ் செய்துவிட்டான். 'ரிஸல்ட்' வந்த அன்று அவனும் அவனது தாயும் உத்தியோகமே கிடைத்துவிட்டது போன்று சந்தோஷமடைந்தனர். இவ்வளவு நாள் அடைந்த கஷ்டத்திற்குப் பலன் கிடைத்துவிட்டதாக ஆனந்தப்பட்டாள் அவள்.

இனி உத்தியோகம் பார்க்க வேண்டியதுதான். ஆனுல் அந்த உத்தியோகம் அப்படி என்ன காய்த்தா தொங்குகிறது! பி. ஏ., எம். ஏ.யும் படித்தவர்களெல்லாம் 'ததிங்கிணத்தோம்' போடும் பொழுது அவன் எம்மாத்திரம்?

வேலை தேடும் படலம் ஆரம்பமாயிற்று. ஆரம்பமாயிற்றே தவிர முடிவு இருக்காதோ என்றுகூட நினைக்கும்படி இருந்தது. படிக்கும் போது, படித்துவிட்டால் வேலை கிடைப்பது சுலபம் என்று நினைத்தது எவ்வளவு தவறு என்பது சுந்தரமூர்த்திக்கு அப்பொழுது தான் புரிந்தது.

யார் யாரையோ பார்த்தான். ஊரெல்லாம் விடாமல் சுற்றினுன். வேலை கிடைக்கும் என்று யாராவது சொன்னுல் அந்த இடத்திற்கு ஓடுவான். வாசகசாலைகளில் பத்திரிகைகளைப் பார்த்து, 'தேவை' களுக்கெல்லாம் சலிக்காமல் விண்ணப்பம் போடுவான். போடும் பொழுது அந்த வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை தோன்றும். ஆனுல் அநேக இடங்களிலிருந்து பதிலே வராது. தப்பித்தவறி ஏதாவது அபூர்வமாகப் பதில் வரும். ஆவலுடன் பிரிப்பான். 'இல்லை' என்ற பதிலாக இருக்கும். மனமுடைந்து போவான்.

அவன் தாயும் அவளுக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் சொன்னுள். தான் வேலை செய்யும் இடங்களிலெல்லாம் கெஞ்சினுள். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. மனமுடைந்து போனுள் அவள்.



“டேய், பஜனேயோடே போகலாம்டா. பொங்கலாவது கிடைக்கும்”

“அது சரி; அது வரைக்கும் அவங்க பாட்டை எப்படியடா சகிச்சுக்கிறது” அதனுலே நாம்ப முன்னுலேயே போய் உட்கார்ந்துடலாம்டா!

அதனுலேயே பலஹீன மடைந்தாள். வேலேகூட அவளால் முன்போல் செய்ய முடியவில்லே. தன் மகன் வேலே செய்து தன் சின்னஞ்சிறிய கைகளால் சம்பாதித்து வந்து கொடுப்பதைக் கண்ணுல் காணுமலே இறந்து விடுவோமோ என்று கூட நினேந்து வருந்தினுள்.

சுந்தரமூர்த்தியும் வேலே தேடித் தேடி மனமுடைந்து போனுன். எந்த வேலே கிடைத்தாலும் செய்யத் தயாராக இருந்தான். வயிற்றைக் கழுவத் தேவையானது கிடைத்தால் போதும் என்று அலேந்தான்.

அவன் மனம் அலுத்துவிட்டது. இனித் தனக்கு வேலே கிடைக்கும் என்ற நம்பிக்கையே அவன் மனத்திலிருந்து அறுந்து விட்டது. இரண்டே வழிகள். ஒன்று, தில்லுமுல்லு செய்து, திருட்டுத் தொழிலில் இறங்குவது; மற்ருென்று தற்கொலே. திருட்டுத் தொழிலில் இறங்கி அவமானமடைவதைவிடத் தற்கொலே செய்துகொள்வதே மேல் என்று தோன்றியது.

தன் தாயின் முகம்தான் அவனேத் தற்கொலேக்குத் துணிய விடாமல் தடுத்துக்கொண்டே வந்தது. உடம்பிலிருந்த ரத்தத்தைச் சாராகப் பிழிந்து தன் மகனின் உடலுக்கும் அறிவுக்கும் உணவாக அளித்த தாயின் உள்ளம் என்னபாடு படும் என்பதை நினேக்க நினேக்க அவனுக்கு மனம் வேதனேப்படும். அழுகையே வந்து விடும். ஆயினும் அவன் மனம் தவித்துக்கொண்டே இருந்தது.

அந்த மாதிரி சமயத்தில்தான் அவன் தாய் யாரோ ஒருவர் மூலம் கேள்விப்பட்டாள் செய்தியை. குபேரா பாங்கியில் ஒரு பியூன் வேலே காலியாக இருப்பதாகவும் அந்தப் பாங்கியின் அதிகாரி நல்லவரென்றும் நேரே வீட்டில் போய்ப் பார்க்கும்படியும் யுக்தியும் சொல்லிக் கொடுத்தார் செய்தி சொன்னவர்.

சுந்தரமூர்த்தியையும் அழைத்துக்கொண்டு அவர் வீட்டுக்குச் சென்ருள் அவள். அவர் காலில் விழுந்து கதறி, தன் நிலேமையை எல்லாம் எடுத்துக் கூறினுள். பரிதாபமடைந்த அவர் ஓர் ‘அப்ளிகேஷனே’ எழுதிக் கொடுத்துவிட்டு முதல் தேதி பதினெரு மணிக்குத் தன்னேப் பாங்கியில் வந்து சந்திக்கும்படியும் முயற்சிப்பதாகவும் கூறியனுப்பினுர்.

அப்பொழுதே தீர்மானம் செய்து கொண்டான் சுந்தரமூர்த்தி. இந்த உத்தியோகமும் கிடைக்கவில்லே என்ருல் தற்கொலே தான் மருந்து என்று.

இன்று உடுப்புகளில் நல்லதாகவும் சுத்தமானதாகவும் எடுத்து அணிந்துகொண்டு தாயிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு கிளம்பினுன் சுந்தரமூர்த்தி. தெருக்கோடியில் இருந்த பிள்ளேயார் கோவிலுக்குள் நுழைந்தான்.

சுந்தரமூர்த்தி பாங்கியை நெருங்கும்பொழுது கிட்டத்தட்ட பதினெரு மணியிருக்கும். வாசலி



விருந்தே நோக்கினான். உள்ளே ஒரே கூட்டம். முதல் தேதியல்லவா?

சிறிது நின்று நோக்கிவிட்டு வாசற்படியில் காலை வைத்தான் அவன். எங்கே போவது அதிகாரியைப் பார்க்க என்பது அவனுக்குப் புரியவில்லை. ‘சரி எதிரே இருக்கும் குமாஸ்தாக்களில் ஒருவரை விசாரிப்போம்’ என்று நினைத்தான். அவன் எண்ணமெல்லாம் வேலையைப்பற்றியே இருந்தது. அவனுடைய வாழ்வும் முடிவும் இன்னும் சிறிது நேரத்தில் தெரிந்துவிடும். தன் நினைவின்றி மெல்ல நடந்துகொண்டிருந்தான் அவன்.

சுந்தரமூர்த்தி உள்ளே நுழைந்த சமயத்தில் உள்ளிருந்து பலவித குழப்பமான கூச்சல் எழுந்தது. ஒரே கலாட்டா! யாரோ ஒருவன் கனமான பெரிய தோல் பையுடன் வாசற்படியை நோக்கி ஓட்டமாக வந்துகொண் டிருந்தான்.

இதொன்றையும் சுந்தரமூர்த்தி கவனிக்கவில்லை. கூச்சலும் அவன் காதில் ஏறவில்லை. கருமமே கண்ணாக முதல் ‘கௌண்ட’ரை நோக்கி நடந்துகொண் டிருந்தான் அவன்.

ஓடிவந்த மனிதன் குறுக்கே வந்த சுந்தரமூர்த்தியைக் கவனிக்காமல் அவசரத்தில் அவன் காலில் இடறிக்கொண்டு மரம் போல் தடாலென்று கீழே விழுந்தான். அவன் கையிலிருந்த சாமான்கள் சிதறிக் கீழே விழுந்தன.

சுந்தரமூர்த்தி அப்பொழுதுதான் சுயநினைவு அடைந்தான். தன்மேல் யாரோ ஒரு பெரிய மனிதன் இடறி விழுந்ததைக் கண்டதும் பரபரப்படைந்தான். விழுந்தவனைத் தூக்கிவிடும் நோக்கத்துடன் தன் இரண்டு கைகளையும் விழுந்தவனுடைய விலாவில் கொடுத்து, கெட்டியாகப் பிடித்துத் தூக்க முயன்றான்.



''இதோ பாருங்க! நீங்க ஹெட் மாஸ்டரு. நான் ஹெட்கான்ஸ்டபிளு. நம்ம ரெண்டுபேருக்கும் அதிக வித்தியாசம் ஒண்ணுமில்லீங்களே? பார்க்கப்போனா உங்களைவிட எனக்குத்தான் எழுத்து அதிகம். தெரிஞ்சுதா?''....

---

அதற்குள் 'ஹோ' என்ற இரைச்சலுடன் அங்கிருந்த ஜனங்கள் அவனைச் சுற்றிக்கொண்டனர். கீழே விழுந்தவன் சுந்தரமூர்த்தியின் தாங்கலுடன் எழ முயன்றுகொண்டிருந்த சமயம் பாங்கிச் சிப்பந்திகள் கெட்டியாக அவனைப் பிடித்துக்கொண்டனர். கீழே விழுந்து கிடந்தபையையும் மற்றொரு பக்கத்தில் கிடந்த துப்பாக்கியையும் எடுத்தனர்.

சுந்தரமூர்த்திக்கு ஒன்றுமே புரியவில்லை. பேந்தப் பேந்த விழித்தான் அவன். சுந்தரமூர்த்தியைத் தட்டிக்கொடுத்தார் பாங்கிக் காஷியர். அவனால்தான் அன்று ஒரு லக்ஷ ரூபாய் தப்பியது என்று புகழ்ந்தார். அவன் எப்படி லாகவமாய்த் திருடனைக் காலால் தட்டி, கீழே விழச் செய்து மேலே விழுந்து விடாமல் பிடித்துக்கொண்டான் என்பதை எல்லோருக்கும் விளக்கிக்கொண்டிருந்தார் அவர். எல்லோரும் அவனைப் புகழ்ந்தனர். சுந்தரமூர்த்திக்கு விஷயம் விளங்கியது. அவன் தான் ஒன்றும் செய்யவில்லை என்றும், திடீரென்று அவனையறியாமல் ஏற்பட்டதென்று மறுத்துக்கூறியும் கேட்கவில்லை அவர்கள்.

''என்ன தைரியம்! என்ன சமயோசித புத்தி! என்ன அடக்கம்'' என்று மேலும் புகழ்ந்தனர். பிறகு வாயைத் திறக்கவில்லை.

சில நிமிஷங்களில் போலீஸ் லாரி ஒன்று வந்தது. கீழே விழுந்த வேகத்தினாலும் மண்டையில் பட்ட அடியினாலும் ஏற்பட்ட மயக்கத்திலிருந்து தெளிந்துகொண்டிருந்த 'முதலில்லா வியாபாரக் கனவானை', காப்பு மரியாதை செய்து பத்திரமாகப் போலீஸ் லாரியில் உட்கார வைத்து அழைத்துச் சென்றனர்.

பாங்கியின் ஒரு லட்ச ரூபாயைக் காப்பாற்றித் தந்த சுந்தரமூர்த்தியை அதிகாரி தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு பாராட்டினார். அவன் தான் இன்னானென்றும் இன்ன காரியத்திற்காக வந்திருக்கிறானென்பதையும் கூறியவுடன், அதிகாரி அவனுக்கு நிச்சயமாகப் பியூன் வேலை கொடுக்கப்போவதில்லை என்று கூறினார். அதைக் கேட்டதும் 'அசந்து' போனான் சுந்தரமூர்த்தி. ஆனால் அதிகாரியின் அடுத்த வார்த்தை அவனை ஆனந்தத்தில் ஆழ்த்திவிட்டது. உதவி காஷியராக உடனேயே உத்தியோகம் கிடைத்தது. அன்று மாலை அவன் வீட்டிற்குத் திரும்பியபொழுது நன்றியறிதலோடு பாங்கின் சார்பில் வெகுமதி ரூபாய் ஆயிரம் அவனுக்களிக்கப்பட்டது.

''அம்மா, உன் கஷ்டம் விடிந்துவிட்டது'' என்று கூவிக்கொண்டே உள் நுழைந்தான் சுந்தரமூர்த்தி. தாயின் காலடியில் ரூபாயை வைத்து வணங்கினான். விஷயங்களைக் கேட்டு ஆச்சரியமடைந்து போனாள் அவள். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக மகனை வாழ்த்தினாள் தாய்.

மறுநாள் கையில் அர்ச்சனை செய்த பிரசாதங்களுடன் பிள்ளையாரின் எதிரே நின்று கைகூப்பி மெய்ம்மறந்து வணங்கிக்கொண்டிருந்தான் சுந்தரமூர்த்தி.



# ஆக்கப்பொறுத்தவர்

கி. சாரங்கராஜன்

''பைனல்ஸிலே பிரகாஷ் காலேஜுக்கு எதிராகச் சித்தார்த் காலேஜ் வந்துட்டாங்க பார்த்தியா? இந்த வருஷம் போட்டி பலமாக இருக்கும்'' என்றான் கண்ணன்.

''ஆமாம். ஆனால் சித்தார்த்தின் 'டைவிங் சாம்பியன்' மதன் ஸிங்கைத் தோற்கடிக்கப் பிரகாஷில் யாரும் கிடையாது'' என்றான் சங்கரன்.

''அது சரிதான். இருந்தாலும் இரு காலேஜிலிருந்தும் யார் வேண்டுமானாலும் பந்தயங்களில் அவ்வப்பொழுது பங்கெடுத்துக் கொள்ளலாமே. யாராவது மறைந்திருந்த மாணிக்கம்மாதிரி.''

''அதுமாதிரி 'பைனல்'ஸுக்கு நேராக வருபவன் பாடு அதோகதிதான். ஆனால் பாரேன், 'டைவிங்' வேண்டுமானால் சித்தார்த்துக்குப் போகும். மற்றப் பந்தயங்களில் எல்லாம் இரண்டு கட்சிகளும் சமபலம் பொருந்தியவை. போட்டி தீவிரமாக விருக்கும்'' என்றான் வினு.

எங்கே பார்த்தாலும் மாணவர்களின் பேச்சு இதே ரீதியில்தான் அடிபட்டுக்கொண்டிருந்தது.

அன்றிலிருந்து இரண்டாவது நாள், 'மகாத்மா காந்தி ஸ்விம்மிங் பூ'லில் அகில பம்பாய் மாகாணக் கல்லூரிகளின் நீச்சல் பந்தயத்தின் 'பைனல்ஸ்' நடைபெற இருந்தது. கடந்த வருஷம் ஜயித்த பிரகாஷ்

காலேஜ் மீண்டும் பைனல்ஸை எட்டி விட்டது. அவர்களுக்கு எதிராகத்தான் சித்தார்த் காலேஜ்.

ஆனால், 'யார் ஜயித்தால் என்ன?' என்று எண்ணும்படியான ஓர் அலட்சியத்துடன், மற்றொரு காரியத்தில் தீவிரமாக முனைந்திருந்தான் 'குண்டு' கோபால். அவன் தான் சித்தார்த் காலேஜ் 'போட்டோ கிராபர்'.

அவன் குண்டு என்பதற்காகச் சில விளையாட்டுகளில் அவனை எடுத்துக் கொள்ளவில்லை! சிலவற்றில் அவனாகவே சேரவில்லை.

செலவுமிக்க பொழுதுபோக்கான காமிராப் பைத்தியம் அவனைப் பிடித்தது. பள்ளிக்கூடப் பிக்னிக்குகளில் பெட்டி காமிராவை வைத்துக்கொண்டு ஆரம்பித்த பொழுதுபோக்கு, காலேஜ் வந்ததும் அவனது ஒரே விளையாட்டாக மாறியது. அவன் தந்தை வசதியுள்ளவர் ஆனதால் பிழைத்தார்!

'குண்டு' கோபாலன் தனது ஆல்பத்தில் ஒவ்வொரு விளையாட்டுக்கும் தனித்தனியே பிரிவு ஏற்படுத்தி, அவற்றில் அந்தந்த விளையாட்டுகளின் சிறந்த அம்சங்கள் பலவற்றை எடுத்து வைத்திருந்தான். அவனது ஒரே குறை தனது நீச்சல் பகுதியில் படங்கள் பல சேரவில்லையே என்பது. இந்தத் தாகத்தை அவ்வருஷப் பந்தயத்தின் ஸெமிபைனல்ஸில் ஒருவாறு தணித்துக்கொண்டான்.

இரண்டு நாட்களில் நடக்கப் போகும் 'பைனல்' மூலமாக அவன் ஆல்பத்தின் நீச்சல் பகுதியை நிறைவு படுத்த விரும்பினான். அதிலும் முக்கியமாக மதன்ஸிங்கின் பாய்ச்சலைப் பலவித கோணங்களிலிருந்து எடுப்பதாகத் தீர்மானித்தான். எனவே கோபால் தனது மாமா பரிசளித்த காமிராவுக்கு 'பில்ம்' சுருள்கள் வாங்கித் தயாராக வைத்துக்கொண்டான்.

* * *

**அ**ந்த நாளும் வந்தது.

மூவர் கொண்ட குழுவினர் நீதிபதிகளாக அமைக்கப்பட்டனர். ஒவ்வொரு போட்டியையும் பரிசீலனை செய்து பாயிண்டுகள் தருவது அவர்கள் வேலை. மேலும் 'டைவிங்' போன்ற முக்கியமான போட்டிகளில் தனித்தனியே சிறப்புகளைக் கவனித்துப் பாயிண்டுகளைக் கொடுப்பதன் அவசியம் ஏற்பட்டிருந்தது.

ஒவ்வொரு போட்டியிலும் முதலாவது, இரண்டாவது ஸ்தானம் பெறுபவர்களுக்கே பாயிண்டுகள் தரப்பட்டன. நீச்சல் அறிந்தவர்கள் மிகவும் குறைவாதலால் இரண்டு காலேஜுகளிலிருந்தும் எத்தனை நபர்கள் வேண்டுமானாலும் போட்டியிட அநுமதிக்கப்பட்டனர்.

'டைவிங்' தான் கடைசிப் பந்தயம். அதில் சித்தார்த் காலேஜினர் மதன்ஸிங்கையும், மோகனையும் அனுப்புவதாகத் தீர்மானித்திருந்தனர். பிரகாஷுக்கு டைவிங்கில் சரியான ஆட்கள் கிடையாது. மோதா ஒருவன்தான் போட்டியிடத் தகுதியென்றாலும் பேருக்காக இன்னுமொருவனையும் நிறுத்துவதாக முடிவு செய்தனர்.

பந்தயங்கள் ஆரம்பமாயின. ஒவ்வொன்றிலும் இருபுறத்திலிருந்தும் போட்டியிடுபவர்கள் தங்கள் முழுத்திறனையும் வெளிப்படுத்தினர். கல்லூரியின் பெயரைக் காக்கவேண்டும் என்ற உணர்ச்சி உந்தித்தள்ள ஒவ்வொருவர் சாமர்த்தியமும் பன்மடங்கு பெருகியது. பழைய "ரிகார்டுகள்" கணக்கில்லாமல் முறிந்தன. இவற்றை எதிர்பாராத நீதிபதிகள் ஆச்சரியத்தால் திணறினர்.

ஒவ்வொரு பந்தயம் முடிந்ததும் இரு கட்சிகளின் பாயிண்டுகளும் அறிவிக்கப்பட்டன. போட்டி ஆரம்பித்து ஒரு மணி கழிந்து பின்னர் சித்தார்த் 21 பாயிண்டுகளும் பிரகாஷ் 19 பாயிண்டுகளும் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் போது பிரகாஷ் 47 பாயிண்டுகளும் சித்தார்த் 43 பாயிண்டுகளுமாக இருந்தது நிலைமை.

இடைவேளைக்குப் பிறகு எட்டு 'அயிட்டங்'கள் இருந்தன. முக்கியமாக அதிகத் தூர நீச்சலில் பிரகாஷ் காலேஜ் முதல், இரண்டா

வது ஸ்தானங்கள் இரண்டையும் அள்ளிக்கொண்டு போய்விட்டது! ஆனால் சித்தார்த் காலேஜும் விரைவில் சமாளித்துக் கொண்டது.

டைவிங்கைத் தவிர மற்றவை எல்லாம் முடிந்து விட்டன. ஆனால் பலப் பரீட்சை தீவிரமாக இருந்தது! இப்பொழுது சித்தார்த் 64 பாயிண்டுகளும், பிரகாஷ் 58 பாயிண்டுகளுமாக இருந்தனர்.

டைவிங்கில் முதல் ஸ்தானத்திற்கு ஐந்தும் இரண்டாவதற்கு மூன்று பாயிண்டுகளும் கொடுக்கப் பட்டிருந்தன.

இதனால் வந்தது வினை!

சித்தார்த் காலேஜ் வெற்றி பெற மதன்ஸிங் முதல் ஸ்தானம் பெற்றால் மட்டும் போதாது! அவர்கள் இரண்டாவது ஸ்தானத்தையும் கைப்பற்றியாக வேண்டும்!

ஆனால் பிரகாஷ் காலேஜுக்கு இரண்டாவது ஸ்தானம் கிடைத்தால் போதும்; மீண்டுமொரு முறை அவர்கள் வெற்றி மாலை சூடுவார்கள்!

குண்டு கோபால் புதிய 'பிலிம்' சுருள் ஒன்றைக் காமிராவில் பொருத்திக்கொண்டு டைவிங் மேடைக்கு விரைந்தான். அவனது அபிலாஷை விரைவில் பூர்த்தியடையப் போகிறது என்று மகிழ்ச்சி யடைந்தான்.

'டைவிங்' செய்ய வேண்டிய நால்வரும் மேடையில் வந்து நின்றனர். அவர்களைத் தவிர்த்து போட்டோ எடுப்பதற்காகக் கோபாலும் அங்கு வந்து நின்றான்.

மதன்ஸிங் நான்காவதாக 'டைவ்' செய்வதாக இருந்தது.

முதலில் பிரகாஷின் மேதா தாவினான். அவனது நிகழ்ச்சி சுமாராகத்தான் இருந்தது. அடுத்து வந்த சித்தர்த்தின் மோகனும், பிரகாஷின் கரீமும் சுத்த மோசமாக இருந்ததால், மேதாவுக்கு இரண்டாவது ஸ்தானம் கிடைத்துவிடும் என்று மாணவர்கள் கூறிக்கொண்டனர். இருந்தாலும், நீதிபதிகள் எவ்வாறு எண்ணுகிறார்களோ!

கடைசியாக மதன்ஸிங்கின் சந்தர்ப்பமும் வந்தது. மரப் பலகை மீது நின்று தயாராகிக் கொண்டான்.

கோபால் ஒருபுறமாக மரப் பலகையின் அருகில் நின்று கொண்டான்.

'கிளிக்' முதல் போட்டோ எடுத்தாகி விட்டது.

காமிரா லென்ஸினுள் மதன் ஸிங்கைச் சரியான கோணத்தில் வைத்துக்கொண்டு இரண்டாவது போட்டோவுக்குத் தயாரானான்.

அவனது ஊக்கத்தில் தன்னையே மறந்தான். மதன்ஸிங்கின் முக பாவங்கள் சிறிது நகர்ந்து பார்த்து, சரியாக இருக்குமிடத்தில் நின்றுகொண்டான்.

'அதோ, மதன்ஸிங் மேலே எழும்புவான், அவன் காற்றில் உலாவும்போது எடுக்கவேண்டும்' என்று நினைத்தான்.

மதன்ஸிங் மரப்பலகையில் இரண்டு குதி குதித்து, பிறகு பலகையை இரண்டு கால்களாலும் அழுத்தி மேலே எழும்பினான். அங்கிருந்து பலவித கரணங்களுடன் காற்றின் வழியே இறங்கித் தண்ணீரினுள் புகுந்து, கரகோஷத்திற்கு மத்தியிலே வெற்றி வீரன் போல மறுகோடியிலிருந்து வெளி வந்தான்.

மதன்ஸிங் மரப்பலகையிலிருந்து மேலே எழும்பியதும் பலகை கீழே அமுங்கிப் பிறகு மீண்டும் மேலே சென்றது.

'குண்டு' கோபாலின் கையிலிருந்த காமிரா கையிலிருந்து துள்ளி நேராகத் தண்ணீரை நோக்கிப் பாய்ந்தது. ஆமாம்! மதன் ஸிங்கை, 'குளோஸ் அப்'பில் எடுக்க விரும்பி மரப்பலகையின் மீது தன்னை யறியாமலே சென்று விட்டான் கோபால்.

'குண்டு' கோபால் செய்வதறியாமல் திகைத்திருக்கையில் மேலெழும்பிய பலகை அவனுடைய பளுவால் கீழே வளைந்தது. கீழே சென்ற வேகத்தில் மறுபடியும் மேலெழும்பியது. இப்படியே ஒரு சில விநாடிகளுக்கு மேலும் கீழுமாக அவன் ஊசலாடிக்கொண்டிருக்கையில்தான் ஜனங்கள் மதன் சிங்குக்குக் கரகோஷம் செய்து கொண்டிருந்தனர்!

அதற்குள் காட்சிகளெல்லாம் நன்கு தெரியும்படியான இடத்தில் உட்கார்ந்திருந்த நீதிபதிகளில் ஒருவருக்குக் கோபால் மரப்பலகையில் குதித்துக்கொண் டிருப்பது தென்பட்டது. அவர் மற்ற நீதிபதிகளுக்கும் அவனைச் சுட்டிக்காட்டினுர். இதற்குள் ஜனங்கள் கவனமும் அவன்பால் திரும்பியது.

வெகுநேரம் சமாளிக்க முடியாமல் சமநிலையை இழந்துவிட்ட கோபால் தனது கால்களை வெற்று வெளியிலே துழாவினுன். பயத்தின் பீதியால் ஒரு கணம் தன் கால்களைக் கைகளால் இறுகப் பிடித்துக்கொண்டான். அப்பொழுதாவது கீழே தண்ணீரில் விழுவதைத் தடுக்கலாம் என்று எண்ணினுனே என்னவோ! அடுத்த விநாடி பல கோணங்களில் குட்டிக்கரணங்கள் அடித்துக்கொண்டு நேராகத் தண்ணீரில் மூழ்கினுன்.

மூன்று வருஷங்கள் முன்பு கல்யாணில் வசித்துக்கொண் டிருந்தபோது அவன் 'உல்ஹாஸ்' ஆற்றில் தண்ணீர் நிறைந்திருக்கும் சமயங்களில் பல தடவைகள் நீந்திக் குளித்திருக்கிறுன். அது அவனுக்கு இப்பொழுது உதவியது. சிறிது தத்தளித்த பிறகு, நீந்தி வெளியே வந்தான். சித்தார்த்தின் மாணவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டனர்.

நீதிபதிகள் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டனர். மெள்ள நேரம் கடந்தது. கால்மணியாயிற்று; 'டைவிங்' முடிவை இன்னும் அவர்கள் வெளியிடவில்லை. மாணவர்கள் பொறுமையிழந்தனர்; கூட்டத்தில் சலசலப்பு அதிகரித்தது.

அப்பொழுதுதான் நீதிபதி ஒருவர் வந்து 'மைக்'கில் பேசினுர்.

''மாணவர்களே, நீங்கள் இப்பொழுது நடந்த போட்டியின் முடிவை அறிய ஆவலாக இருக்கிறீர்கள் என்று அறிவேன். மேலும் இப்போட்டியின் முடிவிலேதான் இரு சாராரின் வெற்றியும் ஊசலாடுகிறது.

''போட்டியில் ஐந்தாவதாகக் கலந்துகொண்ட கோபால் மிக லாவகமாகப் பாய்ந்து அருமையாகக் கரணங்கள் செய்து காண்பித்தான். நீதிபதிகள் மூவரும் ஒருமுகமாக அவனை முதலாகவும், மதன்ஸிங்கை இரண்டாவதாகவும் தேர்ந்தெடுத்தோம். ஆனுல்..''

அதற்குள் மாணவர்களின் கரகோஷம் வானைப் பிளந்தது. 'ஸ்விம்மிங் பூல்' அந்த ஆரவாரத்தில் அதிர்ந்தது. அதன் சுற்று வட்டாரத்திலிருந்தவர்களெல்லாம் திகைத்து நின்றனர்.

சித்தார்த்தின் மாணவர்கள் 'குண்டு' கோபாலையும், மதன்ஸிங்கையும் தோளில் தூக்கிக் கொண்டு கூத்தாடினுர்கள். ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி சில மாணவர்கள் ''சிந்திக்கத் தெரிந்தவர்கள் சித்தார்த்தர்கள்! சிறப்பு மிக்க சித்தார்த்'' என்று பல வித கொடிகளை உயரத் தூக்கினர்.

ஐந்து நிமிஷங்கள் அங்கு நிலவிய சப்தம் தீபாவளியில் ஐம்பது 'ஆடம் பாம்கள்' வெடித்தாலும் வராது!

மாணவர்கள் கைகள் சிவந்தன; வாய்கள் ஓய்ந்தன: ஆரவாரிப்பும் அடங்கியது.

நீதிபதி மேலும் கூறினுர், ''ஆனுல் அதற்கேற்ற உடையணிந்துகொள்ளாமல் போட்டியில் பங்கு கொண்டதால் கோபாலின் நிகழ்ச்சி நிராகரிக்கப்பட்டு, இறுதியில் மதன்ஸிங் முதலாவதாகவும், பிரகாஷின் மேதா இரண்டாவதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்'' என்று முடித்தார்.

ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கவில்லை!

''பிரகாஷ் ஒளி வீசுகிறது'' ''சிந்திக்கத் தெரியாதவர்கள் சித்தார்த்தர்கள்'' என்ற கொடிகள் உயரப் பறந்தன!



# காட்டில் கல்யாணம்

மஞ்சள் வெயில் காயுதாம் (1)
மழையும் கொஞ்சம் பேயுதாம்
கோடியிடி வாத்தியம்
கும்கும் என்று முழுங்குதாம்

கங்க ணகண கணகண (2)
கிங்கிணி கிணி கிணி கிணி
தாரைக் கொம்பு தப்பட்டை
வீரமுரசு தமுக்குடன்

சிங்கராஜா மகனுக்குத் (3)
தங்கராணி மனைவியாம்
ஹாட்டும் பூட்டும் கோட்டுடன்
காட்டுக் குரங்கு ஆடுதாம்

லட்டு, பூந்தி, வடைகளை (4)
பிட்டு பிட்டுத் தின்னலாம்
எல்லோருக்கும் கொடுக்கலாம்
எக்காளமாய்ப் பாடலாம்.

—கே. ஆர். ஜகந்நாதன்.

# தீபாவளிப் பரிசு

எஸ். ரங்கநாயகி

வள்ளி மெதுவாகக் கண் விழித்துப் பார்த்தாள். அவளுடைய சின்னஞ்சிறு மகன் வடிவேலு கண் கலங்க அருகில் உட்கார்ந்திருந்தான்.

''வடிவேலு, நீ இன்னுமா ஸ்கூலுக்குப் போகவில்லை? எழுந்திரு, அந்த மாடத்தில் ஒரணு வைத்திருக்கிறேன். அதை எடுத்துக்கொள். போகும் வழியில் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டு விட்டுப் போ'' என்றாள் வள்ளி.

''இல்லையம்மா, நான் இன்று ஸ்கூலுக்குப் போகப் போவதில்லை.''

''போடா பைத்தியமே. எனக்கு ஜுரமென்று நீ போகாமலிருந்தால் வாத்தியார் திட்டமாட்டாரா? போப்பா, என் ஜுரம் பொழுது சாய்ந்ததும் சரியாகிவிடும்.''

இதற்குள் வாசலில் வடிவேலுவின் சிநேகிதன் அருணாசலம் வந்தான்.

''தீபாவளிக்காக என் மாமா ஊரிலிருந்து வந்திருக்கிறார். மிட்டாய் வாங்கித் தின்ன எனக்கு இன்றே பணம் கொடுத்து விட்டார். மிட்டாய் வாங்கிக்கொண்டு அப்படியே ஸ்கூலுக்குப் போகலாம், வாடா'' என்றான் அவன்.

''நான் வரவில்லையடா. எங்கம்மாவுக்கு நல்ல ஜுரம்.'' அழுதுகொண்டே பதில் கூறினான் வடிவேலு.

''அடேடே, அழாதேடா, வடிவேலு. உங்கம்மாவுக்கு ஜுரம் நிச்சயமாகத் தேவலையாகிவிடும். எங்க தெருவில் பெரிய டாக்டர் இருக்கிறாரே! அவரைக் கூப்பிட்டுக் காட்டு. அவர் ரொம்பக் கெட்டிக்காரர். நான் போகட்டுமா?'' என்று கூறின அருணாசலம் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

''அம்மா, நான் போய் அந்த டாக்டரை அழைத்து வரட்டுமா?'' என்றான் வடிவேலு.

வள்ளி மெதுவாகச் சிரித்தாள். ''இன்னும் உலகம் அறியாத பிள்ளையாக இருக்கிறாயே! வடிவேலு, நாமெல்லாம் ஏழை. அந்தப் பெரிய டாக்டர்கள் பணமில்லாமல் வரமாட்டார்கள். அந்த முருகக் கடவுள்தான் நமக்கெல்லாம் பெரிய டாக்டர். நீ வீணாகக் கவலைப்பட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்காதே. புத்தகங்களை எடுத்துக்கொண்டு ஸ்கூலுக்குப் போ. நீ வீடு திரும்புவதற்குள் எனக்கு உடம்பு நேராகிவிடும்'' என்று தன் மகனைச் சமாதானப்படுத்திப் பள்ளிக்கு அனுப்பினாள்.

கடைத் தெரு வழியாக வடிவேலு சென்றுகொண்டிருந்தபோது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. 'அம்மாவுக்கு உடல் நலமாகப் பணம் வேண்டுமே, அதற்கு என்ன செய்வது?'

உடனே பஸ் ஸ்டாண்டை நோக்கிச் சென்றான் வடிவேலு. மறுநாள் தீபாவளியாதலால் போவோரும் வருவோருமாக ஒரே கும்பலாக இருந்தது. உண்மையாகவே தன் நிலைமையை எடுத்துக் கூறி ஏதேனும் பணம் அளித்து உதவும்படி பல பேர்களிடம் கேட்டான் அவன். ஆனால் அவன் எதிர்பார்த்த பணத்திற்குப் பதில் வசை மொழிகள்தான் நிறையக் கிடைத்தன. ''சே, சே, இந்தச் சின்ன வயதிலேயே பிச்சை வாங்கப் பொய்க் கதை ஆரம்பித்து விட்டாயா? உனக்கு வெட்கமாக இல்லை? நல்ல குண்டாக இருக்கிறாயே, உழைத்துப் பாடுபடக் கூடாது? போடா போ!'' எங்கும் இதே ஏளனப் பேச்சு.

அவமானத்தால் மனம் குன்றி நின்றான் வடிவேலு. சரி, இவர்கள் சொல்வதுபோல் உழைத்துக் காசு சேர்த்தால் என்ன என்ற எண்ணமும் தோன்றியது.




எதிர்ப்பக்கத்தில் ஒரு பருத்த கனவான் கை நிறையச் சாமான்களைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தார். உடனே அவரிடம் ஓடினுன் வடிவேலு.

"ஸார், அந்தச் சாமான்களைக் கொடுங்கள். நான் தூக்கி வருகிறேன்" என்று கூறிக்கொண்டே அவரைப் பின்தொடர்ந்தான்.

"சீ, போடா அப்பால். உன் போன்ற பையன்கள் யோக்கியதை எனக்குத் தெரியும். சாமான் தூக்கி வருகிறேனென்று சொல்லி, கடைசியில் திருடிக் கொண்டு ஓடும் திருட்டுக் கழுதைகள்!" என்று கூறி வேகமாகச் சென்றுர்.

வடிவேலு திகைத்து நின்றுவிட்டான். 'அட கடவுளே, உண்மை உழைப்பிற்கும் எவ்வளவு ஏச்சுப் பேச்சு கேட்க வேண்டியிருக்கிறது! வடிவேலுக்கு அப்பொழுது வள்ளியின் பெருமை மேலும் நன்ருகப் புலப்பட்டது. பாவம், தன் பொருட்டு வெளியில் எவ்வளவு ஏச்சுப் பேச்சுகளைச் சகித்துக் கொண்டு அவள் உழைக்கிருளோ! அந்த அருமைத் தாய்க்கு மருந்து வாங்க இன்று அவனுல் ஒரு பைசா சம்பாதிக்க முடியவில்லை. வடிவேலுவிற்கு 'ஓ' வென அழுகைகூட வந்துவிட்டது.

அவனைத் திட்டிவிட்டுச் சென்ற கனவான் சிறிது தூரத்தில் ஒரு ரிக்ஷாவில் ஏறிக்கொண்டிருப்பதை அவன் பார்த்தான். தூக்க முடியாமல் தூக்கிச் சென்ற சாமான்களை ரிக்ஷாவில் 'வைத்துவிட்டு அவரும் ஏறிக்கொண்டார். அப்பொழுது அவருடைய ஜுப்பா 'ஸைட் பாக்கெட்டி'லிருந்து ஏதோ ஒரு சாமான் விழுந்ததை அவர் கவனிக்கவில்லை. ரிக்ஷாக்காரனும் கவனிக்கவில்லை.

சாமான் விழுந்ததை தூரத்திலிருந்து கவனித்த வடிவேலு ஓடி வந்து அதைக் கையிலெடுத்ததும் ஆச்சரியம் அடைத்தான். அவனுக்கு ஒரே குதூகலம். தன்னைத் திட்டினதற்கு அவருக்கு இது சரியான தண்டனை. வீட்டிற்குப் போய்ப் பர்ஸைக் காணவில்லை என்று நன்ருக அழட்டும். நூறு ரூபாயைக் காணுமென்ருல் கதறமாட்டாரா மனிதர்! என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

உடனே அவனுக்கு மீண்டும் ஒரு சந்தேகம் தோன்றியது. தான் இதை எடுத்துக் கொண்டால், பணம் திருட்டுப் பணமாகிவிடுமே! திருட்டுப் பணத்தில் அம்மாவுக்கு மருந்து வாங்கிக் கொடுத்தால் அவள் பிழைப்பாளோ, மாட்டாளோ! இந்தப் பயம் வந்ததும் வடிவேலு சற்று யோசனையில் ஆழ்ந்து விட்டான். பிறர் பொருளுக்கு ஆசைப் படக்கூடாது என்று வள்ளி எவ்வளவோ தடவைகள் அவனுக்குப் புத்திமதிகள் கூறி இருக்கிருள்; அதனுல் ஓடிச் சென்று அந்த மனிதனிடமே அந்தப் பணத்தை ஒப்புவித்துவிட வேண்டும். தன் உண்மைக் குணத்தினுல் அவர் மகிழ்ந்து, வெகுமதியாக ஏதாவது கொடுப்பார். அப்போது மருந்து வாங்கித் தரலாம் என்று தீர்மானித்தான்.

இதற்குள் ரிக்ஷா வெகு தொலைவில் சென்றுவிட்டது. வடிவேலு அதைத் துரத்திக்கொண்டே ஓடினன். ஆனல் ரிக்ஷாவும் வேகமாக ஓடிக்கொண்டிருந்ததால் உடனே அதைப் பிடிக்க முடியவில்லை. ரிக்ஷா பல சந்து பொந்துகளில் திரும்பி வெகு தூரம் சென்றபிறகு ஆள் நடமாட்டமில்லாத ஓர் இடத்தில் ஒரு பெரிய தோட்டத்தின் வாசல் முன்பு நின்றது. வடிவேலு அந்த இடத்தை அடைவதற்குள் அந்தக் கனவான் சாமான்களைத் தூக்கிக்கொண்டு உள்ளே நுழைந்து விட்டார். ரிக்ஷாக்காரனும் உடனே வேறு சவாரி கிடைத்ததால் எதிர்த்திசையில் சென்று விட்டான்.

தோட்டத்தைச் சுற்றி நான்கு பெரிய சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. கேட்டைத் திறக்க முயற்சித்தான் வடிவேலு. ஆனல் பெரிய பூட்டினல் அது பூட்டி இருந்தது. அவ்வளவு சாமான்களைக் கையில் வைத்துக் கொண்டு, கேட்டையும் அவர் எப்படித்தான் பூட்டினரோ! வடிவேலு கேட்டின் வழியாகப் பார்த்தான். வீடு இருந்த இடமே தெரியவில்லை. அங்கிருந்தபடியே, ''ஸார், ஸார்'' என்று குரல் கொடுத்தான். எவ்வளவு நேரம் கத்தியும், நாயின் குரைப்பைத் தவிர வேறு ஒன்றும் பதில் வரவில்லை. வடிவேலு சோர்ந்து மீண்டும் வந்த வழியே திரும்பினன்.

'இது கடவுளாகப் பார்த்து எனக்குக் கொடுத்த பணமாக ஏன் இருக்கக்கூடாது! ஒரு வேளை கடவுளே என் கஷ்டத்தைப் பார்க்கச் சகியாமல், இம்மாதிரி கனவான் போல் மாறுவேடத்துடன் வந்து நான் பார்த்துக்கொண்டிருக்கும் போது பர்ஸைத் தவற விடுவதுபோல் தவற விட்டாரோ!' என்று எண்ணினன் அவன். மாறுவேடத்தில் கடவுள் வந்து உதவி செய்வதை அவன் எவ்வளவோ இடங்களில் படித்தும் இருக்கிறன், கேட்டுமிருக்கிறனே! அப்படியானல் கடவுள் கருணை கூர்ந்து கொடுத்த பணத்தைக் கண்டிப்பாய் அவன் எடுத்துக் கொள்ளவேண்டும். உடனே வீட்டை நோக்கி ஓடினன் வடிவேலு.

வீட்டை அடைந்ததும், ''அதுக்குள்ளே திரும்பிவிட்டாயே? ஸ்கூல் கிடையாதா?'' என்று கேட்டாள் வள்ளி, மெதுவாகக் கண் விழித்து.

''உண்டும்மா. ஆனல் உனக்குப் பெரிய டாக்டரிடம் மருந்து வாங்கப் பணம் கொண்டு வந்திருக்கிறேன்!'' என்று வடிவேலு நடந்ததை விவரமாகக் கூறினன்.

வள்ளி சட்டென எழுந்து உட்கார்ந்து, ''ஐயோ அசட்டுப் பிள்ளையே, இந்தக் கலிகாலத்தில் கடவுள் மாறு வேடத்தில் வர மாட்டாரா! அந்தப் பணத்தைப் போலீஸ்காரர்களிடம் ஒப்புவித்து விட்டு வந்துவிடு. ஓடு, அவர்கள் உரியவரிடம் சேர்த்துவிடுவார்கள். மற்றவர்களுடைய பணத்தில் நான் மருந்து வாங்கிச் சாப்பிட்டாலும் எனக்கு ஒட்டாது. ஓடு, இப்பொழுதே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று எல்லா விவரங்களையும் கூறி, பர்ஸை அவர்களிடம் கொடுத்துவிட்டு வந்துவிடு'' என்று கட்டாயப்படுத்தினள்.

வடிவேலுவுக்குப் பணத்தைத் திருப்புவதில் இஷ்டமில்லை. ஆயினும் தாய் வார்த்தையைத் தட்ட முடியாமல் வடிவேலு பர்ஸை எடுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றன்.

போலீஸ் ஸ்டேஷனில் சப் இன்ஸ்பெக்டரிடம் வடிவேலு எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறிவிட்டு, பர்ஸை உரியவரிடம் சேர்க்கச் சொல்லிக் கொடுத்து விட்டுத் திரும்பினன்.

அவன் திரும்புவதற்குள், ''தம்பி, இந்தப் பர்ஸ் சொந்தக்காரர் வீட்டைக் காட்ட முடியுமா?'' என்று கேட்டார் சப் இன்ஸ்பெக்டர்.

வடிவேலு, ''முடியும் ஸார்'' என்றன் மரியாதையுடன்.

''அப்படியானல் நீ என்னுடன் வா!'' என்று கூறி, சப் இன்ஸ்பெக்டர் நாலைந்து போலீஸ்காரர்களுடன் வடிவேலுவையும் அழைத்துக்கொண்டு கிளம்பினர்.

சப் இன்ஸ்பெக்டரிடம் பயத்திற்குப் பதில் வடிவேலுவுக்கு இப்

பொழுது நல்மதிப்பு வந்தது. வீட்டைத் தேடி, பணத்தைக் கொடுக்கச் சொல்கிருரே! உருவத்தில் சிங்கம், கருமத்தில் பசுவாக இருக்கிருரே!

அவர்கள் அந்தத் தோட்டத்தின் வாசலுக்கு வந்தபோது அது இப்பொழுதும் பூட்டியிருந்தது. என்ன சப்தம் செய்து கூப்பிட்டுப் பார்த்தும் திறக்கப்படவில்லே. உடனே சப் இன்ஸ்பெக்டர் உத்தரவு கொடுத்தார். போலீஸ் ஜவான்கள் சுவரேறிக் குதித்தனர். சப் இன்ஸ்பெக்டர் வடிவேலுவையும் தூக்கி சுவரிலேற்றிவிட, மறு பக்கத்திலிருந்து ஒரு ஜவான் அவனேக் கீழே இறக்கிவிட்டான்.

சப்இன்ஸ்பெக்டரும் உள்ளே குதித்தபோது, தோட்டத்திலிருந்து ஒரு நாய் இவர்களேப் பார்த்துக் குரைத்து மேலே பாய வந்தது. ஐந்தாறு பேர் கம்பும் துப்பாக்கியுமாக இருந்ததைக் கண்டு அது திரும்பி ஓடத் தொடங்கியது.

நாயின் குரைப்பைக் கேட்டு அந்தக் கனவான் வெளியே வந்தார். அவரை அடையாளம் புரிந்துகொண்ட வடிவேலு, ''இவர்தான் பர்ஸைப் போட்டுவிட்டுச் சென்றவர்'' என்று சப் இன்ஸ்பெக்டரிடம் கூறினன்.

உடனே சப் இன்ஸ்பெக்டர் அவர் கையைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டே, ''என்ன ஸார் இது, பர்ஸைப் போட்டு விட்டீர்களே, அதைத் திருப்பலாமென்று வந்தால் கதவையும் திறக்காமல், நாயையும் மேலே ஏவி விடுகிறீர்களே!'' என்ருர் சிரித்தபடி.

''நானு? பர்ஸா? நான் எங்கேயும் போடவில்லேயே!'' அவர் திகைப்படைந்தவர்போல் கேட்டார்.

வடிவேலுவுக்குத் திக்கென்றது. பர்ஸோடு நூறு ரூபாயையும் தொலேத்துவிட்டு, தம்முடையது இல்லே என்கிருரே! ''ஸார், நீங்கதான் கடைத்தெருவில் நிறைய சாமான்கள் வாங்கி ரிக்ஷாவில் வந்தீர்களே! அப்பொழுது உங்கள் பர்ஸ் கீழே விழுந்து விட்டது உங்களுக்கு இன்னும் தெரியாதா? உங்கள் ஜுப்பா பாக்கெட்டைப் பாருங்கள்.'' என்ருன் வடிவேலு.

''ஏய், என்னடா உளறுகிருய்? நான் காலேயிலிருந்து எங்கும்



போகவே இல்லையே! ஸார். சோம் பேறித் தடியன்! யாரிடமோ திருடி விட்டுத் தப்பித்துக்கொள்ள இந்த மாதிரி தந்திரம் செய்திருக்கி ருன்!'' என்ருர் கனவான்.

வடிவேலுவிற்கு ஆத்திர மாக வந்தது. சப் இன்ஸ் பெக்டர் அவனை மௌனமாக இருக்கும்படி ஜாடை காட்டினுர். பிறகு கனவானிடம், ''ஸார், பர்ஸ் உங்களுடையது இல்லை என் ருல் போகட்டும். இந்த வீடு ரொம்ப நன்ருக இருக்கிறதே! அடேய் 304, நீயும் 408-ம் வீட்டிற்குள் சென்று பார்த்து வாருங்கள்'' என்ருர்.

அந்தக் கனவான் கோபத்துடன் அவர்களைத் தடுத்தபோது, மற்ற இரு ஜவான்கள் அவரைப் பிடித் துச் கொண்டார்கள். வடிவேலு விற்கு 'அச்சோ, இதென்ன குழப் பம்' என்று பயம் பிடித்துக் கொண்டது.

சற்றைக்கெல்லாம் 'பிளான்' பார்த்துவரச் சென்ற 304-ம், 408-ம் திரும்பி வந்து, ''ஸார், கொல்லைப்புறம் ஒரு சுரங்க அறை யில் கள்ள நோட்டுத் தயாரிப்பு யந்திரம் இருக்கிறது. அதுமட்டு மல்ல, தோட்டத்தில் சிறிது தூரத்தில் கள்ளச் சாராயம் காய்ச்ச ஒரு குடிசையும் இருக் கிறது'' என்றனர்.

அதற்குப் பிறகு நடந்ததெல் லாம் கனவுபோல் இருந்தது வடி வேலுவிற்கு: குட்டு வெளிப்பட் டதும் கனவான் ஒன்றும் சொல்ல முடியாமல் விழித்தார். பிறகு அவரைப் போலீஸ் லாரியில் ஏற்றி, எல்லோரும் போலீஸ் ஸ்டேஷனுக் குச் அழைத்துச் சென்றனர்.

பிறகு சப் இன்ஸ்பெக்டர் வடி வேலுவைப் பார்த்து, ''பையா, நீ உண்மையுள்ள பையனுக இருந்த தால் ஒரு கேடியைப் பிடிக்க எங் களால் முடிந்தது. இவனை வெகு நாட்களாகத் தேடி வருகிருேம். இவன் இடம் தெரியாமலிருந்த தால், ஆளை அடையாளம் கண்டுக் கொண்டாலும், ஆதாரமில்லாமல் பிடிக்க முடியவில்லை. நீ எடுத்த பர்ஸில் நல்ல வேளையாக இரு கள்ள நோட்டுகளும் கலந்திருந்தது நல்லதாகி விட்டது. உண்மை யுடன் நடக்க, அவர் பின்னுடி அவர் வீடுவரை சென்று அடை யாளம் கண்டு பிடித்ததும் நல்ல தாயிற்று. அந்தப் பர்ஸைத் திருப்ப விரும்பாமல் நீயே செலவு செய்ய ஆரம்பித்திருந்தால், உண்மை யைக் கண்டறியும் வரை பலவிதத் தொல்லைகளுக்கு ஆளாகியிருப் பாய். நாளைக்குத், தீபாவளி யல்லவா? வா, உனக்கு என் வெகு மதியாக நல்ல நல்ல துணிகளும் பட்டாஸும் வாங்கித் தருகிறேன்'' என்ருர் அவன் முதுகை தட்டி.

இந்தக் குழப்பத்திற்குப் பிறகு வடிவேலுவிற்கு அப்பொழுதுதான் வள்ளியின் நினைவு வந்தது. கண் களில் நீர் மல்க, ''ஸார், எங்கம்மா தான் பர்ஸை உங்களிடம் கொடுக் கச் சொல்லி வற்புறுத்தினுள். எனக்குப் பணம் வேண்டாம், காசு வேண்டாம்; புத்தாடை வேண்டாம். மிட்டாய் வேண்டாம், எங்கம்மாதான் வேண்டும். ஜுரமாகக் கிடக்கும் அம்மா பிழைக்க வழி செய்யுங்கள், ஸார்'' என்று நெஞ்சடைக்கக் கூறினுன்.

உடனே சப் இன்ஸ்பெக்டர் டாக்டரையும் தன் காரில் ஏற்றிக் கொண்டு வள்ளியைப் பார்க்கச் சென்ருர். டாக்டர் பரிசோதனைக் குப் பிறகு மருந்து வாங்கிக் கொடுத்துவிட்டு வீடு சென்ருர்.

அன்று இரவே வள்ளியின் ஜுரம் இறங்கிவிட்டது. மறுநாள் காலை தன் அன்பு மகனுக்கு மிட் டாய்கூடச் செய்ய ஆரம்பித்து விட்டாள்.

''வடிவேலு, தீபாவளிக்கு உனக்குப் புதிதாக ஒன்றுமே இல்லையே'' என்று வருத்தப்பட்ட வள்ளியிடம், ''தீபாவளிக்கு நீ தான் எனக்குக் கிடைத்து விட்டாயே!'' என்று பெருமை யுடன் கூறினுன் வடிவேலு.

ஆனுல் சப் இன்ஸ்பெக்டர் மறக்காமல் தீபாவளியன்று காலை வடிவேலுவிற்குப் புத்தாடையும், பட்டாஸும், மிட்டாய் வகைகளும் வாங்கிக் கொடுத்தனுப்பினுர்.




"ராமுவைத் தலைமை ஆசிரியர் அழைக்கிறார்" என்று பியூன் வந்து கூறியதும், 'பக்கத்து ஊரிலே இடி விழுந்து ஒரு சிறுவனின் பரிதாப மரணம்' என்று நேற்றுப் பத்திரிகையிலே படித்தானே, அந்த இடிதான் தன் தலையில் விழுந்து விட்டதோ என்று ஐயம் கொண்டான் ராமு.

குற்றவாளி 'நீதி மன்றம்' வருவதைப் போன்றிருந்தது அவன் நடை. தலைமை ஆசிரியர் இருக்கும் ஆபீஸ் அறை இன்று பள்ளிக்கு ஒரு மைல் தூரத்தில் கட்டப்பட்டிருக்கிறதோ என்றுகூட நினைக்கும்படியாகி விட்டது. எப்படியோ ஒருவாறு சமாளித்துக்கொண்டு அறையை அடைந்து விட்டான். வணக்கம் செலுத்தினான். தலைமை ஆசிரியர் ஒரு தாளை நீட்டி அதைப் படித்துப் பார்க்கும்படி சொன்னார்.

"இதில் கூறப்பட்டவை யாவும் உண்மையா?" நீதிபதி கேட்கும் தோரணையில் அமைந்திருந்தது தலைமை ஆசிரியரின் குரல்.

"ஆமாம் சார்" குற்றவாளி தன் குற்றத்தை மறைப்பதுபோல இருந்தது அவனுக்கு.

"சரி, நீ போகலாம், உன் வகுப்பு ஆசிரியரை நான் அழைப்பதாகக் கூறிவிட்டுப் போ!"

"வணக்கம் சார்!" தண்டனையை எதிர்பார்த்திருந்த கைதி விடுதலை பெற்று போவதைப் போன்ற பெருமிதம் தொனித்தது. 'பீடு நடை' போட்டு நடந்தான். தலைமை ஆசிரியர் அழைப்பதாகத் தன் ஆசிரியரிடம் கூறிவிட்டு 'விர்' ரென்று நடைகட்டினான்.

"இதுவரை நம்மைப் பாடுபடுத்தி வந்த ஆசிரியரை இன்று பழிவாங்கப் போகிறோம்" என்ற எக்களிப்பு அவன் முகத்திலே தாண்டவமாடியது..

* * *

அந்தப் பள்ளியிலே 'எட்டாம் வகுப்பு ஆசிரியர்' என்றால் பொதுவாக எல்லாப் பிள்ளைகளுக்குமே வேம்பாகத்தான் கசக்கும்.

காரணம் சிறு குழந்தைகளைக்கூட அவர் விளையாட விடமாட்டார்.



"என்ன ஸார்! நம்ம மானேஜர் ஆபீஸிலேதான் பேசறதுக்கு நடுங்கறார்னு பஜனையிலேயும் நடுங்கிண்டே பாடறாரே!"

"ப்பூ! இதெல்லாம் எந்த மூலை? வீட்டிலே அவர் மனைவிகிட்டே நடுங்கிறதைப் பாத்தா, இதெல்லாம் எவ்வளவோ தேவலையே!"

---

அவரிடம் 'நல்ல பெயர்' எடுக்க வேண்டுமானால், புத்தகமும் கையுமாகத்தான் பிள்ளைகள் காட்சியளிக்க வேண்டும். விளையாட்டுப் பீரியடு என்று கால அட்டவணையில் இருந்தாலும், அந்த நேரம்கூட பாடமோ அல்லது பயிற்சியோ கொடுத்துக்கொண்டிருப்பார்.

'வீட்டில்தான் விளையாட்டுக்கு இடமில்லையே, பள்ளியில் சென்று சுதந்தரப் பறவையாகச் சுற்றலாம்' என்று கருதிவரும் பிள்ளைகளுக்கு ஏமாற்றமே அங்கே கிடைத்தது.

குறும்புக்காரப் பிள்ளைகளுக்கும், சோம்பேறிப் பையன்களுக்கும் படிப்பில் விருப்பமில்லா மாணவர்களுக்கும், அவர் யமனாகக் காட்சி அளித்து வந்தார்.

ராமு அவர் வகுப்பு மாணவன் மட்டுமல்ல, மானிட்டரும்கூட. 'பர்ஸனாலிடி'யாலும் செல்வச் சிறப்பாலும் மாணவர்களிடையே நன்மதிப்புப் பெற்றவன். கோபு அவன் சகமாணவனோடு உயிர்த் தோழனுமாவான். வகுப்பிலே முதலில் அவன்தான் வருவான். அடுத்தபடியாகத்தான் ராமு வருவான். செல்வச் செருக்கு ராமுவுக்கு உண்டு. இதுவரை அவன் படித்து வந்த வகுப்புகளிலெல்லாம் அவனுக்கும் கோபுவுக்கும் சலுகை கிடைத்துவந்தது. ஆனால் 'சிடுமூஞ்சி' யிடம் வந்ததிலிருந்து (மாணவர்கள் பாஷைப்படி அந்த ஆசிரியருக்குக் கிடைத்த பட்டப் பெயர் அதுதான்) அவர்கள் சலுகைகளும், சுதந்தரமும் பறிபோய்க்கொண்டிருந்தன. அதனால் அவர்களுடைய 'நன்மதிப்பு' மிகவும் பாதிக்கப் பட்டதாகக் கருதினர்.

கால் வருடப் பரீட்சையில் ராமுவும் கோபுவும் முதலும் இரண்டாவதுமாக வந்தனர். அப்படியிருந்தும், வகுப்பில் கடைசியில் வந்த பிள்ளைகளுக்குச் சரிசமமாக, மறுபடியும் பரீட்சைமாதிரி எழுதத் தூண்டிய தண்டனை, அவர்களுக்கு வெறுப்பை உண்டாக்கியது. வேம்போடு எட்டிக்காயும் ஒன்று சேர்ந்தது. எப்படியாவது அந்த ஆசிரியரை ஒழித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள் இருவரும். அதற்கேற்ற சந்தர்ப்பமும் சீக்கிரமே கிடைத்து விட்டது.

அன்று அவசர அவசரமாகப் பள்ளி முடிந்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த மாணவர்களில் கடைசியாக ராமுவும் கோபுவும் போய்க்கொண்டிருந்தனர். எதிர்பாராவிதமாகக் கால் இடறி கோபு மாடிப்படியிலே விழுந்தான். காயம் பட்டது. அந்தக் காயத்தை மையமாகக் கொண்டுதான் அந்தச் சதித் திட்டம் உருவாக்கப்பட்டது. கேள்விக்குச் சரியாக விடையளிக்காததால் வாத்தியார் கோபித்து வெளியே பிடித்துத் தள்ள, கீழே விழுந்து காயம் பட்டதாக வீட்டிலே தகப்பனாரிடம் கூறி 'ரிப்போர்ட்' எழுதி வாங்கி வந்து தலைமை ஆசிரியரிடம் கொடுத்து விட்டனர். வாத்தியார் தள்ளியதை நேரில் பார்த்ததாக ராமு சாட்சி கூறினான். அதன்

நிமித்தம்தான் ராமு தலைமை ஆசிரியரால் அழைக்கப்பட்டுத் திரும்பிவந்தான் அன்று.

பரீட்சை முடிவை எதிர் நோக்குவதைப் போல வாத்தியார் ஆபீஸ் அறையினின்று வெளியே வருவதை ஆவலுடன் எதிர் நோக்கி இருந்தனர் இருவரும். ஆனல் முடிவு அன்று வெளியாகாது என்பதை வெகு நேரம் காத்திருந்த பிறகு உணர்ந்து வெளியேறினர்.

* * *

மறுநாள் ராமுவும் கோபுவும் சீக்கிரமே பள்ளிக்கு வந்து விட்டனர். வாத்தியார் முகத்தில் இனி எப்படி விழிப்பது என்று மனச் சாட்சி உள்ளே உறுத்தினுலும் பழிவாங்கும் உணர்ச்சியே அப்போது மேலோங்கி நின்றதால் தைரியமாகவே அன்று பள்ளிக்கு வந்தார்கள். ஆனல்..! எதிர் பார்த்த நபர் எங்கே? தினமும் ஒன்பது மணிக்கே பள்ளிக்கு வந்து விளையாடும் பிள்ளைகளை விரட்டிக்கொண் டிருக்கும் ஆசிரியர் ஏன் இன்று 9-30 மணி ஆகியும் வரவில்லை?

ஆயிற்று, மணியும் அடித்தாகி விட்டது. ''சிடுமூஞ்சியைக் காணவில்லையே. சீட்டுக் கிழித்து விட்டார்களோ என்னவோ!'' என்று எண்ணமிட்டனர். ''ஆம்..நம்முடைய ரிப்போர்ட் நன்ருக வேலை செய்திருக்கிறது. அதனுல்தான் இன்று வரவில்லை. ராமு வா கொக்கா? என்று பெருமை அடித்துக் கொண்டான் கோபுவிடம்.

அன்றைத்தினம் தலைமை ஆசிரியர் ஒரு பீரியடு வந்து பாடம் எடுத்து விட்டுப் போனுர். மற்ற நேரமெல்லாம் அரட்டைக் கச்சேரி தான். சுதந்தரப் பறவைகளாக அன்று மாணவர்கள் சுற்றினுர்கள்.

அதற்கடுத்த நாளும் ஆசிரியர் வரவில்லை. ஆடல்-பாடல்-மகிழ்ச்சி தான்.

மூன்ரும் நாள் ஒரு புது ஆசிரி





''என்ன ஐயா, காபியிலே எண்ணெய் மிதக்குது?''

''எண்ணெய்தானே? நல்ல வேளை! இல்லாட்டி இப்ப விக்கிற விலையிலே நெய்யா இருந்தா என்ன ஆகறது?''

---

யர் வந்தார். ''ஆதிக்க வெறி கொண்ட ஆசிரியர் நீக்கப்பட்டார். இனி அடக்கு முறைக்கு ஆளாக மாட்டோம்'' என்று புது ஆசிரியர் காதில்பட கோஷித்தார்கள் அந்த வகுப்பு மாணவர்களெல்லாம்.

''டேய், வந்திருக்கும் 'ஹிட்லர் மீசை' எப்படி இருக்குமோ!'' என்று ஒருவன் சந்தேகத்தைக் கிளப்பினன்

''டேய், இது ஜனநாயக இந்தியாடா, மக்களின் ஆதரவு கிடைத்தால்தான் மந்திரிகளாகவும், பார்லிமெண்ட் மெம்பர்களாகவும் வரலாம். இல்லையேல் மனித இனத்தில்கூடச் சேர்த்துக்கொள் முடியாது.'' இது ராமுவின் கம்பீர மான குரல்.

புது ஆசிரியர் அவர்கள் எதிர் பார்த்ததற்கு மாருக இருந்தார். 'மானீட்டர்' ராமு எதைக் கூறினு லும் அப்படியே செய்துவிட்டால் போகிறது என்று ஆமோதிக்கும் 'அருமை ஆசிரியரா'கிவிட்டார்.

''சார், இந்தப் பீரீயடு சோஷியல் வேண்டாம், சார்! சொக்கட்டான் ஆடலாம்'' என்ருல், ''சரி அப்படியே செய்யுங்கள்'' என்று கூறி விடுவார். ராமு வைத்ததுதான் சட்டம். ஏகபோக உரிமை!

சுமார் ஒருமாத காலத்திற்கு மேலாகிவிட்டது. சிடுமூஞ்சி யைப் பற்றிய தகவலே தெரியவில்லை. எந்த வாத்தியாரைக் கேட்டாலும் சொல்ல மறுத்தார். அவனுடைய அடாத செய்கை, புழுப்போலிருந்து மனத்தை அரித்துக்கொண்டேயிருந்தது.

இ. எஸ். எல். ஸி பரீட்சைக்கு அனுப்ப 'செலக்ஷன்' பரீட்சை வைக்கப்படும் இன்னும் ஒரு வாரத்தில். ஆகையால் நன்ருகப் படியுங்கள் என்று தலைமை ஆசிரியர் வந்து கூறிவிட்டுப் போய் விட்டார். பாடம் நடந்தாலல்லவா படிப்பதற்கு?

புது வாத்தியார் வந்தார். பாடங்களைக் குறித்துக் கொடுத்து விட்டார். சோஷியல் 18 பாடம், சயின்ஸ் 15, தமிழில் 12, ஆங்கிலம் 13 என்று குறிப்பிட்டு விட்டார் பரீட்சைக்கு வரும்படியான பாடங்களை.

''ஆங்கிலம் ஒன்றுமே தெரியாதே சார்'' இது ராமுவின் ஈனக்குரல்

''சயின்ஸில் எக்ஸ்பிரிமெண்டே செய்து காட்டவில்லையே சார்!''

''சோஷியலுக்கு 'மேப்'பே யூஸ் பண்ண வில்லையேசார்!''

''பாடம் எடுத்தாலல்லவா 'மேப்'யூஸ் செய்ய?''

''தமிழிலே ஒரு பாடமும்..!''

''டேய் இருக்கவே இருக்கு தமிழ் நோட்ஸ்.''

இது போன்ற கேள்விகளும் பதில்களும் அடிப்பட்டுக்கொண்டிருந்தன மாணவரிடையே.

''ஏண்டா ராமு, ஒரு பாடமும் எடுக்காமல் எதையடா எழுதுவது? கேட்பதுதானே வாத்தியாரை!'' என்று கூறினர்கள் மாணவர்கள். ராமு துணிந்து கேட்டும் விட்டான்.

''அப்பா! ராமு! ஜனநாயக நாடல்லவாப்பா இது! மாணவர்கள் இஷ்டப்படி நடக்கவில்லை என்ருல் என் பதவி அரோகரா வாகிவிடுமே! அதனுல்தான் உங்கள் இஷ்டப்படியே நடந்து வந்தேன்'' என்ருர். ராமுவுக்குத்

தொண்டையில் 'சுருக்'கென்று முள் குத்தினாற்போலிருந்தது.

மூன்று நாட்களுக்குள் எல்லாப் பாடப் புத்தகத்திலும் 30 பாடத்திற்குமேல் மடமடவென்று நடத்தி விட்டார், ஆசிரியர். திருதிருவென்று விழித்தனர் ஆசிரியரைப் பார்த்துப் பிள்ளைகள். வீட்டிலே சொல்லிக் கொள்ளவும் முடியவில்லை. படிக்கவும் முடியவில்லை. சக மாணவர்கள் அனைவரும் சேர்ந்து ராமுவைத் திட்ட ஆரம்பித்தனர்.

''சோஷியல்போது சொக்கட்டான் ஆங்கிலம்' அப்போ 'ஹாக்கி', கணிதத்தின் போது 'கிரிக்கெட்', சயின்ஸ் அப்போது 'டென்னிஸ்' இன்னும் 'புட்பால்', 'தரோ பால்' என்று பலவகை ஆட்டங்களைப்பற்றி ஆராய்ந்து அலசிப்பார்க்கவே சரியாக இருந்தது. அப்போது கால அட்டவணைப் படி பாடம் எடுத்திருந்தால் இந்தக் கஷ்டம் நேரிட்டிருக்காது அல்லவா? உன்னால்தான் குட்டிச் சுவர் ஆகியது'' என்று ராமுவைப் பிலுபிலு என்று பிடித்துக் கொண்டனர். ராமுவுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. 'மதிப்பு' மலையேறி விட்டதை உணர்ந்தான். செல்வச் செருக்கு சிறிது சிறிதாக மறைந்தது.

''விளையாட்டிலே சிறிதும் கவனத்தைச் சிதறவிடாது அறிவைப் பெருக்குவதிலேயே கவனத்தை ஈர்த்துவந்த அருமை ஆசிரியரை அழவைத்து அனுப்பி விட்டாயே'' என்று சண்டையிடத் தொடங்கினார்கள்.

''தன்னெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்தப்பின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்'' என்ற குறளை ராமு ஆயிரம் முறை படித்து விட்டான். அன்று ஆசிரியரும் அதைத்தான் விளக்கிக் கூறினார். படிக்காத போதே சுட்டுக்கொண் டிருந்த அவன் செய்கை குறளைப் படித்து அதன் உண்மையை அறிந்த பிறகு பன்மடங்காக இன்னும் சுட்டது.

'செலக்ஷன்' பரீட்சையில் அவன் மனம் செல்லவேயில்லை. அவனை விட அதிக மார்க் வாங்கும் கோபுகூட விழித்துக்கொண் டிருந்தான். புரியாத ஒரு பாஷையில் தான் கேள்விகள் அச்சிட்டுக் கொடுத்துவிட்டார்களோ என்று சந்தேகித்தனர். கேள்வியே புரியவில்லை என்றால் விடை எங்கிருந்து உதயமாகப் போகிறது அவர்கள் மனத்தில்.'

அவர்கள் எதிர் பார்த்தபடியே 'முன்னேற்ற அறிக்கையில்' பரீட்சைக்குப் பணம் கட்ட ஒருவருமே தகுதியில்லை என்று எழுதித் தலைமை ஆசிரியர் பெற்றோர்களுக்கு அனுப்பிவிட்டார். திட்டும் உதையும் பரிசாகக் கிடைத்தன பெற்றோர்களிடமிருந்து.

தலைமை ஆசிரியர் அன்று வகுப்புக்கு வந்தார். ''இதுவரை இப்பள்ளியில் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்று வந்திருக்கின்றனர். இப்பரீட்சையில் அப்படியிருக்க இந்த முறை ஒருவர்கூட பரீட்சை ஹாலுக்கே செல்ல அருகதையில்லை என்பதை அறியும் போது மிகவும் வருத்தமாகவும் அதே நேரத்தில் வெட்கமாகவும் இருக்கிறது. பள்ளிக்கே அபகீர்த்தியைத் தேடித் தந்து விட்டீர்கள் நீங்கள். பள்ளிக்கு வருவதனால் என்ன பயன்? வீட்டிலேயே இருந்து விளையாடலாம்'' என்று கூறி விட்டுப் போய்விட்டார்.

'மாணவர் கூட்டம்' கூடியது. பழைய வாத்தியாரை அனுப்பியதின் பலனை உணர்ந்துவிட்டார்கள். இனி ஒரு நிமிஷமும் தாமதிக்கக் கூடாது. அவர் வந்தால் ஒரு வாரத்திலே நம்மைப் பரீட்சைக்குத் தகுதியுள்ளவராகச் செய்து விடுவார். நேரே ஆசிரியரிடம் சென்று மன்னிப்புப் கேட்டுக் கொண்டு அவரை வரவழைப்பது என்று தீர்மானித்தார்கள்.

தலைமை ஆசிரியரிடம் பழைய வாத்தியாரைப்பற்றி விசாரித்ததில் அவர் மூன்று மாத லீவில் இருப்பதாகக் கூறினார். அவரை எப்படியாவது வரவழைக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர்.

''உங்களில் யாராவது ஒருவர் சென்று அவரை அழைத்துப் பாருங்கள். நான் விலாசம் தரு



**மகன்:** அப்பா, ஒரு தவறு செய்திட்டேன். ஒரு ரூபாய் விற்கவேண்டிய தைலபுட்டியை எட்டணவுக்கு விற்று விட்டேன்.

**அப்பா:** கவலைப் படாதே மகனே! அதிலும் நமக்கு ஏழணு லாபம் இருக்குது.

---

கிறேன்'' என்ருர் தலைமை ஆசிரியர். ராமுவே முன் நின்ருன்.

அவர் இருக்கும் போது, ஓய்ச்சல் ஒழிவில்லாமல் பாடம் எடுக்கிருர். எப்போது அவர் ஒழிவார், வேறு வாத்தியார் எப்போது வருவார் என்று எதிர்பார்த்திருந்தனர். இக்கரைக்கு அக்கரை பச்சையாக இருக்குமென்று கருதினர். ஆனல் அங்கே சென்று கவனித்ததும் அல்லவோ தெரிந்தது, 'இக்கரையே மேல் அக்கரையைவிட' என்று.

மாணவர் படை திரண்டெழுந்தது மறுநாள். ஆசிரியர் வீட்டெதிரே முகாமிட்டது. 'ஆசிரியரே வருக! அறிவுச் சுடரே வருக! வருக! வாயார மனமார அழைக்கிருேம்! எங்கள் பிழையைப் பொறுத்துப் பள்ளிக்கே மறுபடியும் வருமாறு வேண்டிக்கொள்கிருேம்' என்று கோஷித்தனர். ராமு தன் செய்கைக்குத் தனியாக மன்னிப்புக் கேட்டான்.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சி ஆசிரியருக்கு அதிர்ச்சியைத் தந்தது. மாணவரை எப்போது பார்க்கப் போகிருேம் என்று ஏங்கியிருந்த அவருக்கு ஆனந்தத்தை அளித்தது மாணவரின் வருகை. அவருடைய இருபது வருட சர்வீஸில் தொடர்ந்து ஒரு மாதத்துக்கு மேல் லீவு எடுத்தது இதுதான் முதல் முறை. அதுவும் அவரே எடுக்கவில்லை. தலைமை ஆசிரியர் அல்லவா அன்று பலவந்தப்படுத்தி 'ரஜா' எடுத்துக் கொள்ளச் சொன்ஞர்?

ராமு கொடுத்த 'ரிப்போர்ட்' பொய் என்று தலைமை ஆசிரியருக்குத் தெரிந்து விட்டது. 'அருகே இருக்கும்போது இனிக்காத பண்டம் தூர இருக்கும் போது இனிக்கிறது. அடுத்து ஒரே ஆசிரியரே பாடம் எடுத்ததால் அவர்கள் அலுத்துப் போய் விட்டார்கள். நீங்கள் சிறிது நாட்கள் ஓய்வில் இருங்கள். அப்போது பிள்ளைகளே உங்கள் அருமை உணர்ந்து தேடி வந்து அழைப்பார்கள்' என்று தலைமை ஆசிரியர் கூறினரே, அது சரியாகிவிட்டது.

புது வாத்தியாருக்குக்கூட அவ்வாறு (பிள்ளைகளின் இஷ்டம் போல நடப்பது) என்று உத்தரவிட்டு அனுப்பியதும் அவரே தான். இதை அந்த மாணவர்கள் எவ்வாறு உணருவார்கள்?

''மாணவர் பழைய ஆசிரியரைப் பற்றிச் சிந்திக்கும் சிந்தனைச் சிற்பிகளாகி விட்டனர். ஆசிரியரின் அருமை தெரிந்து விட்டது. படிப்பில் புலியாகத்தான் இருப்பார்கள் இனி. அவர்களே அழைக்கச் சென்றுவிட்டார்களே'' என்று சந்தோஷமடைந்தார் தலைமை ஆசிரியர்.

மறுநாள் ஒரு மந்திரிக்குக்கூட அத்தனை வரவேற்பிருக்காது. மாணவர் முகத்திலே அத்தனை மகிழ்ச்சி. அதிலும் ராமுவும் கோபுவும் விழுந்து விழுந்து ஆசிரியரை உபசரித்தது ஒரு தனி ஆனந்தமாக இருந்தது. 'சிடுமூஞ்சி' வாத்தியார் இன்று சிந்தனைச் சிற்பியாகிவிட்டார்!

# நீங்களும் நானும்

## ஆர்வி

**எஸ். மாணிக்கம், மாயூரம்.**

**கே:** மந்திரிகள் எந்த ஊருக்குப் போனாலும் எந்த விழாவுக்குப் போனாலும் ஏதாவது பிறருக்கு உபதேசம் செய்துகொண்டே யிருக்கிறார்களே; ஏன்?

**ப:** நாம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் அல்லவா? அதனால் தான் மந்திரிகள் எப்போதும் நமக்கு ஏதாவது யோசனைகள் சொல்லிக்கொண் டிருக்கிறார்கள்.

**எம். பி. எம். பஸ்லுல்ஹக், முகத்துவாரம்.**

**கே:** நெப்போலியனைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

**ப:** ஆயுத பலத்தைவிட தன் நெஞ்சுப் பலத்தையே நம்பியிருந்த மாபெரும் வீரன் என்பதுதான்.

**எம். ஆர். லக்ஷ்மிபதி, சென்னை-7.**

**கே:** உலகிலேயே மிகப் பெரிய பீடபூமி எது?

**ப:** ''பூலோக சிகரம்'' என்று அழைக்கப்படும் திபேத்திலுள்ள பாமீர் பீடபூமிதான். தலாய் லாமா, பாஞ்சன் லாமா என்று இரண்டு பௌத்தசந்நியாசிகள் தான் திபேத்தின் தலைவர்கள். சுமார் நாற்பது லட்சம் மக்கள் வசிக்கும் பூமி திபேத்து.

**ஆ. ல. நரசிம்மன், பாதூர்**

**கே:** தாய் என்பவள் எப்படிப் பட்டவள்?

**ப:** வீதியிலே நண்பர்கள் உன் ஆடையைப் பார்க்கிறார்கள்; செருப் புத் தைப்பவன் காலைப் பார்க்கி றான். க்ஷவரத் தொழிலாளி தலை யைப் பார்க்கிறான். பிச்சைக்காரர் கள் உன் கையைப் பார்க்கிறார்கள். அப்பா உன் நெஞ்சைப் பார்க்கிறார். ஆனால் வயிறு வாடியிருக்கிறதா என்று முதலில்பார்க்கிறாளே அவள் தான் தாய்!

**ஏ. பி. மீனாக்ஷிசுந்தரம், தென்காசி.**

**கே:** நம்பிக்கை என்பது என்ன?

**ப:** அது தவறான வழிகாட்டி; ஆனால் 'நல்ல வழித் துணை' என்பது மேல்நாட்டுப் பழமொழி.

**ஆர். குழந்தைவேலு, மதுரை.**

**கே:** சிரியா என்றுமே சுதந்தர நாடாக இருந்ததில்லை என்கிறீர் களே, உண்மையா?

**ப:** உண்மைதான்; பாபி லோனியா, பாரசீகம், கிரீஸ் முத லிய ராஜ்யங்களோடு இணைந்து கிடந்த சிரியா, நானூறு ஆண்டு களாகத் துருக்கியின் ஆதிக்கத்தில் இருந்தது. யுத்தத்தில் ஜெர்மனி அதைப் பிடித்து கொண்டது. 1944-இல் தான் அது தனியே சுதந் தர நாடாக ஆக்கப்பட்டது. முப் பத்திரண்டு லட்சம் மக்களே சிரியா வின் ஜனத்தொகை. அதாவது கிட்டதட்ட சென்னை நகர ஜனத் தொகையைப் போல் இரண்டு மடங்கு. சென்னை நகரம்; ராஜ்ய மல்ல; கவனிக்கவும்.

**பி. கே. பொன்னுசாமி, பெரம்பூர்.**

**கே:** சீட்டோ, நேட்டோ (Seato, Nato). நாடுகள் என்றால் என்ன?

**ப:** தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த நாடுகள்; வட அட்லாண்டிக் ஒப் பந்த நாடுகள் என்று இரண்டு பெரிய நிர்வாகக் கூட்டணிகளையே சுருக்கமாக அவ்வாறு அழைக் கிறார்கள்.

**டி. பி. மாணிக்கவாசகன், திருநெல்வேலி.**

**கே:** ரஷ்ய சந்திரனைப் பார்த்த தாக என் நண்பன் கூறுகிறான். ஆனால் எனக்கு அது தெரியவே யில்லை. அதை எப்படிப் பார்ப்பது?

**ப:** தம்பி, உன் நண்பன் பார்த்த தாகச் சொல்வது வெறும் பிரமை. சென்னையில்கூட பல இடங்களில் கூட்டம் கூட்டமாகச் சிலர் நின்று அதோ ரஷ்யச் சந்திரன், இதோ ரஷ்யச் சந்திரன் என்று கையைக் காட்டிச் சொல்லிக்கொண் டிருக் கிறார்கள். இது சகஜமாகிவிட்டது. வானத்தை அண்ணாந்து பார்த்து, கோடிக்கணக்கான நட்சத்திரங் களில் ஏதோ ஒன்றை ரஷ்யச் சந் திரன் என்று எண்ணி மயங்குகிறார் கள். ரஷ்ய சந்திரன் வெறும் கண்ணுக்குப் புலப்படாது. மிகச்

சக்தி வாய்ந்த தூரதிருஷ்டிக் கண்ணுடியால்கூட அதைப் பார்க்க முடியவில்லே. இருபத்திரண்டு அங்குலமே அகலமுள்ள ஒரு சிறிய செயற்கைப் பொருளே, ஐந்நூறு மைல் உயரத்தில் மணிக்குப் பதினெட்டாயிரம் மைல் வேகத்தில் சுற்றிவரும் அதை யாராவது பார்த்தேன் என்று சொன்னல், அதை நீ நம்பவேண்டாம். ஏதாவது ஒரு நட்சத்திரத்தைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டே இரு. அது எல்லேயற்ற வான வெளியில் சுற்றுவதுபோல உன் கண்களுக்குத் தோன்றும். நம் பூமி சுற்றுவதால் உண்டாகும் தோற்றம் அது. இப்பொழுது இரண்டாவது செயற்கைச் சந்திரன் (ரஷ்ய சந்திரனுக்கு ஸ்புட்நிக் என்று பெயரிட்டிருக்கிருர்கள்) பூமியைச் சுற்ற விடப்பட்டிருக்கிறது. இது முதல் சந்திரனேவிடப் பன் மடங்கு பெரியது. கிட்டதட்ட அரை டன் எடையுள்ளது. (முதல் சந்திரன் 183 பவுண்டு எடையே உள்ளது.) கிட்டத்தட்ட முதல் சந்திரனேவிட இரண்டு மடங்கு அதிக உயரத்தில் சுற்றி வருகிறது. இதைப் பார்த்ததாகச் சில நாடுகளில் கூறுகிருர்கள். உத்தரப் பிரதேச முதல் மந்திரி கூடப் பார்த்தாராம். ஆனல் இதுவும் வெறும் கண்ணுக்குத் தெரியும் என்று ரஷ்யர்களே கூறவில்லே.

**க. நடராஜன், ஈரோடு.**

கே: நம் நாட்டில் பிச்சைக்காரர்கள் அதிகரித்து வருகிருர்களா?

ப: ஆமாம்; நம் நாட்டில் தனியார் தொழில் அதிகரித்து வருகிறது. பிச்சையெடுப்பது ஒரு தொழில்.

**ப. சுப்பிரமணியன், குரும்பப்பட்டி.**

கே: மேல்நாடுகளேவிட நம் நாடு எந்தத் துறையில் சிறந்து விளங்குகிறது?

ப: ஆன்மீகத் துறையில்.

**கி. கலியபெருமாள்; ஆக்கூர்.**

கே: இப்போது கண்ணன் கழக அங்கத்தினராக என்ன செய்ய வேண்டும்?

ப: இப்போது ஆக முடியாது. பதினுயிரம் அங்கத்தினர்கள் இப்பொழுது இருக்கிருர்கள். அவர்கள் பெயர்கள் முழுவதும் பதிவாகி முடியவில்லே. எனவே மேலும் அங்கத்தினர் சேர்ப்பதை நிறுத்தி வைத்துள்ளோம். பின்னல் தெரிவிக்கும்போது சேரலாம்.

**எஸ். ஆர். நாராயணன், கல்கத்தா-29.**

கே: அமெரிக்க ஜனதிபதிக்கும் இந்திய ஜனதிபதிக்கும் உள்ள வேற்றுமை என்ன?

ப: அமெரிக்க ஜனதிபதி நாட்டின் தலேவராக இருப்பதுடன், நம் நாட்டுப் பிரதம மந்திரிக்குரிய நிர்வாக அதிகாரமும் உடையவர். இந்திய ஜனதிபதிக்கு நிர்வாகத்தின் பொறுப்புக்கள் இல்லே. நாட்டின் நிர்வாகத்தை ஒரு ஸ்திரமான சர்க்காரிடம் ஒப்படைத்துவிட்டு, கவனித்துக்கொண் டிருப்பதோடு சரி. அவசர காலங்களில் மட்டும் அவர் நாட்டின் தலேவர் என்கிற முறையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன்வரலாம்.

**தி. த. வள்ளுவதாசன், சென்னே-2.**

கே: படித்ததை மறவாமலிருக்க டாக்டர் மருந்து ஏதாவது கொடுப்பாரா?

ப: சில டாக்டர்கள் மறக்க முடியாதபடி பில்கள்கூடக் கொடுப்பதுண்டு, மருந்தைப்பற்றி எனக்குத் தெரியாது.

**ஜே. அருணசலம், அயன்புரம்.**

கே: எப்போது பார்த்தாலும் எனக்கு வயிற்றுவலி. நாலு வருஷங்களாக மருந்து சாப்பிட்டும் பயனில்லே. இதற்கு என்ன செய்வது?

ப: குடல் புண்ணுகியிருக்கும். இதற்கு மருந்தும் சோதனேகளும் இருக்கின்றன. நல்ல டாக்டரிடம் போய் வைத்தியம் செய்துகொள். இன்னமும் வளரவிட்டால் வியாதி முற்றிவிடும்.

**அ. சின்னச்சாமி, கவுந்தப்பாடி.**

கே: இந்தியாவிலேயே சிறந்த பணக்காரர் யார்?

ப: பெரிய பணக்காரர் டாடா அவர்கள்தான்.

கதை: 'ஆர்வி'

# கடற் புலி

சித்திரம்: ஸாமி




அடுத்த விநாடி, கடற்புலி புரண்டு, தன் வாளை எடுத்து . . . . . .
உம்!
வரா!
கூட்டம் ஹா ஹோ என்று கடற்புலியைச் சூழ்ந்து கொள்ள, தலைவன் காதருகில் கிழவர் ஏதோ சொல்கிறார்.
உடனே, தலைவன் கையில் உருவிய வாளுடன் கடற்புலி அருகில் வர . . .
உஷார்! இவன் இடதுகைச் சண்டைக்காரன்! ஆபத்து!

(தொடரும்)

# பீதி

**ராஜன்**

விளக்கு வைக்கும் நேரம். ராஜா சந்தடியில்லாமல், அடிமேல் அடி எடுத்து வைத்து பங்களாவுக்குள் நுழைந்தான். கூடத்தில் ஜன்னல் ஓரமாகச் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தார் அவனுடைய அப்பா காப்டன் கோபிநாத். அவர் ராணுவத்தில் காப்டனுக வேலே பார்த்து வந்தார். ஆகையால் காப்டன் என்னும் சொல் அவருடைய பெயருடன் ஒட்டிக்கொண்டது. ராஜா, அவர் திரும்பிப் பார்த்துவிடக் கூடாதே என்று பயந்தபடி பூனே போல் மாடிக்குச் சென்ருன். படிக்கட்டுக்களேக் கடந்ததும், அவனுடைய அம்மாவின் அறைக்குள் எட்டிப் பார்த்தான். அவள் தினசரிச் செலவுப் புத்தகத்தில் கணக்கு எழுதிக்கொண்டிருந்தாள்.

ராஜா மெல்ல நடந்து, அவனுடைய அக்கா சீதாவின் அறைக்குள் தைரியமாக நுழைந்தான். சீதா மருத்துவ சம்பந்தமான புத்தகங்களேப் புரட்டிக்கொண்டிருந்தாள். மேஜையின் மீதிருந்த ஸ்டெதஸ்கோப்பும், கனமான புத்தகங்களும், அவள் மருத்துவக் கல்லூரியில் படிக்கிருள் என்பதை எடுத்துக் காட்டின.

''சீதா!''

அவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

''என்னடா?''

''ஒரு ஐந்து ரூபாய் வேண்டும்.''

''எதற்கு?''

ராஜாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவனுக்குப் பணம் வேண்டும் போதெல்லாம் சீதாவிடம்தான் கேட்பது வழக்கம். உண்மையில் இரும்புப் பெட்டியின் சாவி அவளிடம்தான் இருந்தது. அம்மாவுக்குப் பணம் வேண்டுமென்ருலும் சீதாவிடம்தான் கேட்டு வாங்கிக்கொள்வாள். சீதா சிக்கனக்காரி. அவள் பிறந்தது முதல்தான் காப்டனின் இல்லத்தில் செல்வம் கொழித்தது. அவள் பிறந்த அதிருஷ்டம் கூரையைப் பிய்த்துக்கொண்டு ஏராளமான பணத்தைக் கொடுத்ததாகக் காப்டன் கோபிநாத்தும் அவருடைய மனேவியும் எண்ணிஞர்கள், அந்த அதிர்ஷ்டம் கைவிட்டுப்



போகாமல் இருக்கவேண்டும், காப்டன் கோபிநாத்துக்கு மேலும் மேலும் வேலை உயரவேண்டும் என்று எண்ணி, இரும்புப் பெட்டிச் சாவியை சீதாவிடமே கொடுத்து வைத்திருந்தார்கள். சீதாவுக்கு ராஜாவின் மேல் அளவு கடந்த அன்பு. அவன் இண்டரில் படித்துக்கொண் டிருந்தான். அவன் செலவுக்குப் பணம் வேண்டுமென்ருல், சீதா ஏன் என்று கேட்பது கிடையாது. அநாவசியமாக அவன் செலவு செய்யமாட்டான் என்பது அவள் திடமான எண்ணம். ஆனால், இன்று மட்டும் ஏன் என்று கேட்டு விட்டாளே?

ராஜா திணறினன்.

சீதா புரிந்து கொண்டாள். ''கோபித்துக் கொள்ளாதே ராஜா! வீட்டில் செலவு அதிகமாகிக் கொண்டே வருகிறது. உனக்காக அப்பா மாதம் பத்து ரூபாய்க்கு மேல் கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிருர். அம்மா தினசரிச் செலவு எழுதும்போது கடுகடுவென்று இருக்கிருள். அப்பாவுக்கு எவ்வளவுதான் சம்பளம் உயர்ந்தாலும், செலவு செய்யும் போது ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மேல் போகக்கூடாது. இந்த மாதம் நீ அறுபது ரூபாய் செலவு செய்திருக்கிருய். நான் செலவு செய்துவிட்டதாக அம்மாவிடம் சொல்லி, அவளுடைய திட்டையும் வாங்கிக்கொண்டேன்.''

ராஜாவுக்குக் கண்களில் கண்ணீர் வரும்போல் ஆகிவிட்டது. அதைப் பார்த்ததும் சீதாவின் மனம் கலங்கிவிட்டது. உடனே இரும்புப் பெட்டியைத் திறந்து ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து. ''அப்பா கண்டிப்பானவர் என்பதுதான் உனக்குத் தெரியுமே! அவர் காப்டனுக இருப்பதால், சிறு தவற்றைக்கூட அவர் எளிதில் மன்னிக்க மாட்டார். அவருடைய கோபத்துக்கு நாம் ஆளாகக் கூடாது. நேரத்திற்கு நீ பங்களா வந்து சேருவதில்லை என்று அப்பா சொல்லிக்கொண் டிருந்தார். ஜாக்கிரதை!'' என்ருள்.

ராஜா ஒன்றும் சொல்லவில்லை. தயங்கிவிட்டு, அவன் வெளியே சென்ருன். அவன் உடனே வெளியே சென்றது சீதாவுக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஜன்னலில் எட்டிப் பார்த்தாள் அவள். தூரத்தில், பத்து வீடுகளுக்கு அப்பால் ராஜாவின் நண்பன் ஒருவன் நின்றிருந்தான்.

* * *

இரண்டு நாட்கள் கழிந்தன. இரவு எட்டு மணியிருக்கும்.

சீதா மேஜையின் மீதிருந்த விளக்கைப் போட்டுவிட்டுப் படித்துக் கொண்டிருந்தாள்.

''சீதா!''

அவள் படிப்பதை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

ராஜா நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்க்கக் கோரமாக இருந்தது. பேய் அறைந்தாற் போல் என்பார்களே, அப்படியிருந்தான் அவன். ராஜா ஏன் இப்படி நிம்மதியிழந்து காணப்படுகிருன் என்று அவளுக்குப் புரியவில்லை.

''என்னடா?'' என்ருள் சீதா.

''இருபது ரூபாய் வேண்டும். தயவு செய்து ஏன் என்று கேட்காதே!''

சீதாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இன்னும் இரண்டு நாட்கள் கழித்து இருபது இருநூருக மாறுமோ என்ற பயம் அவளை மிரளச் செய்தது. அவள் மனத்தில் மின்னல் போல் ஓர் எண்ணம். அவள் ஒன்றும் சொல்லவில்லை. சிரிப்பை வரவழைத்துக்கொண்டு எழுந்தாள். இரும்புப் பெட்டியைத் திறந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்தாள்; இரும்புப் பெட்டியை மூடித் திரும்பினுள்.

ராஜாவைக் காணும்!

அவன் ஏதோ ஒரு பெரிய ஆபத்தில் சிக்கியிருக்க வேண்டும் என்று நினைத்தாள் சீதா. அந்த ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே அவன் இப்படியெல்லாம் பணத்தை இரைக்கிருன் என்று நினைத்தாள். அவன் ஊதாரித்தனமாகச் செலவு செய்கிருனு என்ன? சேச்சே! அப்படியிருக்காது! முன்பெல்லாம் அவன் மாலை



வேளைகளில் பிடிவாதமாகக் காரை வெளியே கொண்டுபோய் அரை காலன் பெட்ரோலைக் காலி செய்து விட்டு வருவான். இப்போது காரையே அவன் தொடுவதில்லையே! அவன் காரை எடுத்துச் சென்று இருபது நாட்கள் ஆகின்றன. எங்கேயாவது போகவேண்டுமென்றால்கூட நடந்தோ பஸ்ஸிலோ போகிறான். அவன் போக்கில் மாறுதல் ஏற்பட்ட பிறகுதான், அவன் பணத்தை இப்படி வரம்பில்லாமல் செலவு செய்கிறான். சீதா தனது டைரியைப் புரட்டினாள். குடும்பத்தில் நடக்கும் எந்தச் சின்ன விஷயத்தையும் அவள் டைரியில் எழுதாமல் விடமாட்டாள். ராஜா கடைசியாகக் காரை வெளியே கொண்டு போன தேதியைப் பார்த்தாள். டைரியை மூடிவைத்துவிட்டு அவள் ஸ்டெதஸ்கோப்பைக் கையில் சுழற்றிக்கொண்டே ஜன்னல் பக்கம் பார்த்தாள்.

இப்போது ராஜா புழக்கடைப் பக்கம் சிறிது தூரத்தில் இருந்த ரெயில் பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

சீதா அவசரம் அவசரமாக வெளியே வந்தாள். ஒருவருக்கும் தெரியாமல் புழக்கடைப் பக்கம் நழுவி, செடிகளின் மறைவில் நிதானமாக நடந்தாள்.

ரெயில் பாதையின் பக்கத்தில் ஒருவன் நின்றிருந்தான். அவன் யாரென்று சீதாவுக்குத் தெரியவில்லை.

அப்போது மின்சார ரெயில் வரும் சத்தம் கேட்டது. இருவரும் கொஞ்சம் விலகி வந்துநின்றார்கள்.

ரெயில் வேகமாகப் பறந்தது. ரெயில் வண்டி அள்ளி வீசிய வெளிச்சத்தில் அந்தப் பையனைப் பார்த்தாள் சீதா.

அன்று மாலை தெருவில் நான்கு வீடுகள் தள்ளி நின்று ராஜாவுக்காகக் காத்திருந்த அதே பையன் தான் அவன்! அந்தப் பையன் இதற்குமுன் அவர்கள் பங்களாவுக்கு வந்திருக்கிறான். அவன் பெயர்கூட. . .

ஞாபகம் வந்துவிட்டது!

அவன் பெயர் கணேசன். ராஜாவுடன் படிக்கிறான்!

ரெயில் மறைந்து விட்டது. ரெயில் வண்டி தூரத்தில் ஓடும் சத்தம், சீதாவின் இதயத் துடிப்புடன் போட்டிப் போட்டது!

ராஜாவும் கணேசனும் பிரிந்தார்கள்.

ராஜா பங்களாவை நோக்கி நடந்தான். கணேசன் ரெயில்

பாதையை ஒட்டிச் சென்ற பாதையில் நடந்தான்.

சீதா குறுக்கு வழியில் பாய்ந்து சென்றாள். கணேசனை நெருங்கியதும் உரக்கக் குரல் கொடுத்தாள்.

''கணேசன்!''

சீதா வேகமாக நடந்து சென்று அவன்முன் நின்று, ''நான் யார் தெரிகிறதா?'' என்றாள்.

கணேசன் திகைப்புடன், ''ஏன் தெரியாது! ராஜாவின் அக்கா!'' என்றான்.

''அதுமட்டுமல்ல, நான் ஒரு டாக்டர்; ஞாபகமிருக்கட்டும்!''

''எதற்காக மிரட்டுகிறீர்கள்?''

''உன்னை நான் மிரட்டவில்லை. உன் பாக்கெட்டிலிருக்கும் இருபது ரூபாயை எடு!''

''ஏன்?''

''ஏனா? அதை ராஜா உன்னிடம் கொடுத்தான். அந்த இரண்டு நோட்டுக்களின் எண்களையும் நான் குறித்து வைத்திருக்கிறேன்!''

கணேசன் மௌனமாக இருந்தான்.

''ஏன் விழிக்கிறாய்? சென்ற மாதம் இருபதாம் தேதி என்ன நடந்தது என்பது எனக்குத் தெரிந்துவிட்டது; இப்போது எங்கள் பங்களாவில் போலீஸ் காத்திருக்கிறார்கள் உன்னை வந்து பிடிக்க!''

கணேசனால் பேச முடியவில்லை!

''போன மாதம் இருபதாம் தேதியா?'' என்று சிறிது நேரம் கழித்துக் கேட்டான் கணேசன்.

''ஆமாம். அன்றுதான் ராஜா கடைசியாகக் காரைக் கொண்டு போனான். அதற்கப்புறம் அவன் காரை வெளியே எடுப்பதேயில்லை! இப்போதாவது புரிகிறதா?''

''புரிவதற்கு என்ன இருக்கிறது! ராஜா உங்களிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டிருக்கிறானே! அடிபட்ட அந்த மனிதர் மூளை குழம்பி வீட்டிலேயே கிடக்கிறார். அவர் எங்கள் வீட்டில் குடித்தனம் இருப்பவர். அவருக்கு மூளை கலங்கிவிட்டது. காரைக் கொண்டு வந்து மோதியதால், அவர் கீழே விழுந்து மூளைக் கோளாறு ஏற்பட்டது. உடனே போலீஸுக்குப் போனாலும், ராஜாவுக்கு ஆபத்து! ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றாலும், எப்படி அடிபட்டது என்று கேட்பார்கள். அவருக்குச் சிகிச்சை செய்யவே ராஜா பணம் தருகிறான்! நானும் அவரும் ஒன்றாகப் போய்க் கொண்டிருந்தபோதுதான் விபத்து நடந்தது. ராஜா என் நண்பன் என்பதால், நான் இந்த விபத்தை மறைத்து வைத்தேன்! இது தவறா?''

சீதாவுக்குப் பிடி கிடைத்துவிட்டது! ஒரே நொடியில் விஷயம் விளங்கிவிட்டது! அவள் போட்டாள் ஒரு போடு! ''இதோ பார், கணேசன்! உன்கூட வந்த மனிதர் கீழே விழுந்துவிட்டார் என்பதைத் தவிர வேறு அடி ஒன்றும் படவில்லை! ராஜா பயந்து போய் அவரை மறுபடியும் பார்க்கவில்லை. விபத்தைப் பற்றிப் போலீஸில் புகார் செய்ய வேண்டாம் என்றும், அப்பாவிடம்கூடச் சொல்ல வேண்டாம் என்றும், உன்னுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். அதுதான் அவன் செய்த தவறு. இந்தச் சந்தப்பத்தை நீ பயன்படுத்திக் கொண்டு, ராஜாவை அடிக்கடி பயமுறுத்திப் பணம் பிடுங்கி வந்திருக்கிறாய். இப்போதே அந்த அடிபட்ட மனிதரை நானே பரிசோதனை செய்து, ஒன்றும் கோளாறு இல்லை என்று சர்டிபிகேட் தரப்போகிறேன். ராஜாவை மிரட்டிப் பணம் வாங்கியதற்காகப் போலீஸ் உன்னைக் கைது செய்யப் போகிறது! தெரியுமா?''

கணேசன் பதறிவிட்டான். ''அக்கா! என்னைக் காப்பாற்று! இனிமேல் இப்படியெல்லாம் செய்ய மாட்டேன்! இது சத்தியம்!'' என்று சொல்லிக்கொண்டே இருபது ரூபாயை அவளிடம் கொடுத்துவிட்டு, அவளுடைய கால்களைப் பிடித்துகொண்டு அழுதுவிட்டான்!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

| | |
|---|---|
| வன்னிவேலம் பட்டி (மதுரை ஜில்லா) | உபதலைவர்: சதானந்தம்<br>செயலாளர்: சு. வேம்புலு<br>பொருளாளர்: கை. ஜயப்பிரகாஷ் |

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 'பூஞ்சோலை' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. சு. வேம்புலு c/o தலைமை ஆசிரியர், போர்டு ஆதாரப் பள்ளி, வன்னி வேலம்பட்டி போஸ்டு என்ற விலாசத்துக்கு கதைகள் முதலியன அனுப்பலாம்.

| | |
|---|---|
| அவிநாசி | உபதலைவர்: வே. சு. கிருஷ்ணமூர்த்தி.<br>செயலாளர்: ப. ரா. சுப்பிரமணிபட்<br>பொருளாளர்: நா. சின்னத்தம்பி |

பத்துப்பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'வாடாமலர்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நூல்நிலையம் ஒன்றும் நடத்தப்படுகின்றன. வே. சு. கிருஷ்ணமூர்த்தி, 9, அக்கிர காரம், அவிநாசி என்ற விலாசத்துக்குக் கதைகள் அனுப்பலாம்.

# பேனா நண்பர்கள்

1. சு ப. அண்ணாமலை, மு. கரு. சுப. இல்லம், கூளிபிறை அஞ்சல் திருச்சி ஜில்லா.

2. ஏ. நாகராஜன், c/o ஏ. ஐயாத்துரை, 65, தேர்வீதி, மதுராந் தகம்.

3. சி. ஸ்ரீ. ஸ்ரீ. நாதன், 21. குமாரசாமி கோயில் தெரு, திருப்பத்தூர். (வ. ஆ.)

4. எஸ். ஷாகுல் ஹமீது, 'குளம்பிறை', 18, செல்லபாச்சா வீதி, ஈரோடு.

5. ஆர். தங்கமணி, 6-ஆம் படிவம், B பிரிவு, கே. வி. எஸ். உயர்நிலைப்பள்ளி, விருதுநகர்.

6. ஆர். பலராமன், 6. கன்னிகோயில் தெரு, திருவண்ணாமலை (வ. ஆ.)

7. வி. ஜம்புலிங்கம், 'அன்பு நிலையம்', 49, ஐயன்குளத் தெரு, திருவண்ணாமலை (வ. ஆ.)

8. ஜ. ஸ்டீபன் ராஜு, 5-ஆம் படிவம், நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, வெண்ணந்தூர் போஸ்டு, சேலம் ஜில்லா.

9. ஓ. ஜி. ஆர். தீனதயாளன், 16, புதுத் தெரு, கஸ்பா, ஆம்பூர்.

10. கே. சீனிவாசராகவன், 152, பாரதி வீதி, புதுச்சேரி

11. ஏ. ஆர். வி. தேசிகாச்சாரி, c/o எ. வி. ரங்கசாமி ஐயங்கார் 38 A&B, ராஜா பஸந்தராய் ரோடு, கல்கத்தா-29

12. பி. டி. அனந்தகுமார், c/o பி. எம். டி. முதலியார், 56, நாணாபேட், புனா-2

## வெளிநாட்டுப் பேனா நண்பர்களுக்கு:

மிஸ் அன்னா மரியா பிரான், ஜெர்மனி என்ற முகவரிக்கு ஆங்கிலத்தில் எழுதலாம்.

Miss Anna Maria Braun, The International Correspondence Bureau, Minchen 15, Lindwurmstrasse 126-A/Germany.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

புதிய நாணய விகிதப்படி

# கண்ணன் வெளியீடுகள்

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் உள்ளன. இதோ அந்தப் பட்டியல்:—

| | | ரூ. நயா பைசா |
|---|---|---|
| 1. | வீடர் மணி - ஆர்வி | 1.50 |
| 2. | சந்திரகிரிக் கோட்டை - ஜனா | 1.25 |
| 3. | அசட்டுப் பிச்சு - ஆர்வி | 1.00 |
| 4. | சின்ன ராஜா - வாசகன் | 0.75 |
| 5. | பவழவல்லி - கி. ரா. | 0.75 |
| 6. | விளையும் பயிர் - கி. வா. ஜ. | 0.50 |
| 7. | சமர்த்து மைனா - தி. ஜ. ர. | 0.50 |
| 8. | அபாயச் சங்கு - நீலம் | 0.50 |
| 9. | ஜக்கு - ஆர்வி | 0.50 |
| 10. | ஜம்பு - ஆர்வி | 0.50 |
| 11. | ஏரிக்கரை மாளிகை - ஜனா | 0.50 |
| 12. | மின்னல் அரக்கன் - ஜனா | 0.50 |
| 13. | ராஜாவும் குருவியும் - 'சோமசன்மா' | 0.50 |
| 14. | கழுகும் கிளியும் - 'சோமசன்மா' | 0.50 |
| 15. | தவளையும் காளையும் - 'சோமசன்மா' | 0.50 |
| 16. | விஞ்ஞானம் பேசுகிறார் - பெ. நா. அ | 0,50 |
| 17. | பாரஸீக ரோஜா - ஆர்வி: ஸாமி | 0.32 |
| 18. | தூங்கும் அழகி - ஆர்வி: ஸாமி | 0.25 |
| 19. | குளிகைத் தீவு - ஆர்வி: சங்கர் | 0.25 |
| 20. | மாஸ்டர் பாலகுமார் - ஆர்வி: ஸாமி | 0.25 |
| 21. | நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர் | 0.20 |
| 22. | பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் - எஸ். ஜே. | 0.20 |
| 23. | கோழி விதைத்த நெல் - சூடாமணி | 0.20 |
| 24. | தங்கத்தின் பந்து - சூடாமணி | 0.20 |
| 25. | என் பேர் என்ன? - சூடாமணி | 0.20 |
| 26. | கவிஞர் கதை - கி. வா. ஜ. | 0.62 |
| 27. | தங்க மாம்பழம் - ராஜி | 2.00 |
| 28. | மஞ்சள் பங்களா - ஜி. ஜயராமன் | 1.00 |
| 29. | புலிக் குட்டி - ஆர்வி: ஸாமி (அச்சில்) | |

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.**